# கோவர்தன்ராம்


ரமன்லால் ஜோஷி



T
891.471 809 2
G 746 J

இந்திய

T
891.471 809 2
G 746 J





உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலை சிற்பம்—கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.

படஉதவி : நேஷனல் மியூஸியம், புதுதில்லி).

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# கோவர்தன்ராம்


ஆங்கில மூலம்

ரமன்லால் ஜோஷி

தமிழாக்கம்

திலகவதி



சாகித்திய அக்காதெமி

*Govardhanram*— Tamil translation by Thilakavathi of Ramanlal Joshi's monograph in English, Sahitya Akademi, New Delhi 1990

**SAHITYA AKADEMI**
**REVISED PRICE Rs. 15-00**

© சாகித்திய அக்காதெமி
முதல் வெளியீடு : 1990

T
891.471
G

சாகித்திய அக்காதெமி

ரவீந்திரபவன், 35, ஃபெரோஸ்ஷா சாலை, புதுதில்லி-110 001.

'சுவாதி' மந்திர் மார்க், புது தில்லி-110 001.

ஜீவன்தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பார் ரோட், கல்கத்தா-700 053.

29, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018.

172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய மார்க்கம்
தாதர், பம்பாய், 400 014.

Indian Institute of Advanced Study
117393.
14/12/94

Library IIAS, Shimla
T 891.471 809 2 G 746 J
00117393

**SAHITYA AKADEMI**
**REVISED PRICE Rs. 15-00**

பாவை அச்சகம், சென்னை-14.

# சமர்ப்பணம்

மேதை கோவர்தன்ராமின் கலைத்திறனையும்
சிந்தனை வளத்தையும் தன் ஆற்றல் மிகு விளக்க
வுரைகளால் வெளிக்காட்டிய

**விஷ்ணுபிரசாத் திரிவேதி**

அவர்களுக்கு

# வெளியீட்டார் குறிப்பு

சாகித்திய அக்காதெமியின் சார்பில் சென்னையில் எழுத்தாளர் அசோகமித்திரன் இயக்குநராகக் கொண்டு ஒரு மொழி பெயர்ப்பாளர் பட்டரை நடந்தது அதில் இருபதுக்கும் மேற்பட்ட மொழி பெயர்ப்பாளர்கள் கலந்து கொண்டனர். அந்த பட்டரையில் மொழி பெயர்க்கப்பட்ட நூல்களில் இதுவும் ஒன்று.

சாகித்திய அக்காதெமி

# பொருளடக்கம்

| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பண்பாட்டு பின்னணி | ... | 9 |
| 2. | வாழ்க்கைக் குறிப்பு | ... | 13 |
| 3. | கோவர்தன்ராமின் வாழ்வியல் நோக்கு | ... | 17 |
| 4. | 'சரஸ்வதி சந்திரன்' | | 26 |
| 5. | 'ஸ்நேகமுத்ரா' மற்றும் பிற கவிதைகள் | ... | 36 |
| 6. | 'லீலாவதி ஜீவன்கலா' | ... | 41 |
| 7. | விமர்சன நூல்கள் | ... | 45 |
| 8. | பல்வகை எழுத்துக்கள் | ... | 56 |
| 9. | முடிவுரை | ... | 58 |
| இணைப்பு I | குறிப்பேடுகளிலிருந்து சில பகுதிகள் | ... | 59 |
| இணைப்பு II | கோவர்தன்ராம் எழுதிய நூல்களும் கட்டுரைகளும் | ... | 63 |
| இணைப்பு III | கோவர்தன்ராம் பற்றி வெளிவந்த நூல்கள் | ... | 67 |

# 1. பண்பாட்டுப் பின்னணி

ஆங்கிலேயர் ஆட்சி, அரசியலில் மட்டுமின்றி இந்தியப் பொருளாதார, கலாசார துறைகளிலும் கண்கூடான, ஆழ்ந்த மாற்றங்களைத் தோற்றுவித்தது. நெடுங்காலமாக, நமது சமுதாயம் மரபுச் சிறையில் கட்டுண்டிருந்தது. நாட்டுநலனுக்கு ஒவ்வாத, காலத்துக்குப் பொருந்தாத சம்பிரதாயங்கள், குறுகிய நோக்கமுடைய சித்தாந்தங்கள் ஆகியவற்றினால் பிணைக்கப் பட்டிருந்தது. ஆங்கிலேயருடன் நேர்ந்த தொடர்பினால் நமக்குப் பல வாசல்கள் திறந்தன. வாழ்வின் பல துறைகளிலும் மறுமலர்ச்சி தோன்றுவதற்கு ஏதுவாகக் காலம் கனிந்தது. விழிப்புணர்வையும், உயிர்த் துடிப்பையும் நாடு மீண்டும் பெற்றது. எந்த மறுமலர்ச்சியும் முதலில் கலாசார மாற்றங்களைக் கொண்டு வருவதுதான் இயல்பு. இந்தியக் கலாசார மறுமலர்ச்சியின் தந்தை ராஜாராம் மோகன்ராய் ஆவார்.

1817-ல் அதுவரை அடங்கிக் கிடந்த சுதந்திர வேட்கை என்னும் எரிமலை வெடித்தது. 'கலகம்' என்று சொல்லப்படினும் இழந்த சுதந்திரத்தைப் பெறுவதற்கான முதல் முயற்சி அது என்பதே உண்மை. முயற்சி தோற்றது. எனினும் விக்டோரியா அரசியாரின் பிரகடனத்துக்கு வழி கோலியது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியின் கீழ் இருந்த இந்தியா ஆங்கிலப் பேரரசின் அங்கமானது. அரசியல் மாற்றம் பற்றிய கனவுகள் அனைத்தும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டன. தலைவர்கள் தம் சித்தத்தை முற்றிலுமாக, கலாசார, சமூக மாறுதல்களின் பக்கம் திருப்பி னார்கள்.

கலகம் நடந்த அதே ஆண்டில்தான், கல்கத்தா, சென்னை, பம்பாய் ஆகிய நகரங்களில் பல்கலைக் கழகங்களும் தொடங்கப் பட்டன. இது வரலாற்றின் வேடிக்கை. அடுத்த ஆண்டே, கல்கத்தாவில் இருந்து இந்தியப் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டதாரியாக கல்கத்தாவில் பங்கிம் சந்திர சட்டர்ஜி வெளி

வந்தார். இவரே பிற்காலத்தில் இந்திய இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தார். இந்த பல்கலைக் கழகங்கள், சமூக சீர்திருத்த வாதிகளின் முயற்சிகளுக்கு உறுதுணையாய் இருந்தன. நவீன கல்வி மற்றும் பகுத்தறிவு சார்ந்த எண்ணங்களுக்கான தாகத்தை அவை தணித்தன. வாழ்க்கையின் சிக்கல்களுக்கான தீர்வுகளை மக்கள் பகுத்தறிந்து பார்க்கத் தொடங்கினர். மனிதாபிமான நோக்குடன் அவற்றை அணுகத் தலைப்பட்டனர். மரபு சார்ந்த கருத்துகள் வலுவிழக்கலாயின. புத்திவார்தக் சபை, தத்துவசோதகசபை, வித்யாப்யாசக் சபை, மானவதர்ம சபை, (அறிவு ஜீவிகளுக்கும், தத்துவ ஞானிகளுக்கும், மனிதாபிமானி களுக்குமான சங்கங்கள்) ஆகியன நிறுவப்பட்டன இத்தகைய சபைகளுக்கு சூட்டப்பட்ட பெயர்களே அக்காலத்தவரின் மனப் பான்மைக்கு எடுத்துக் காட்டாகும். 1848-ல் குஜராத் மொழி சபை அமைக்கப்பட்டது. அறிவு ஜீவிகளுக்கான புத்திவாதக் சபை 1851-வது ஆண்டில் தொடங்கப் பட்டது. 1858-ல் கவிஞரும், சீர்திருத்தவாதியுமான நர்மத் அதன் செயலாளர் ஆனார். 1860-ல் தத்துவசோதக சபை என்னும் தத்துவ ஞானிகளுக்கான சபை நிறுவப்பட்டது. எனினும் 1858-ல் வெளியிடப்பட்ட 'வசனமாலா' என்னும் நூலே புதிய கலாசார, சமூக எழுச்சிக்கு வித்திட்ட குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சி என்று கொள்ளலாம்.

பட்டம் பெற்ற இளைஞர்கள் அறிவுத் தாகம் மீதூரப் பெற்றவர்களாய் இருந்தனர். கல்லூரியில் கற்ற ஆங்கில, சமஸ்கிருத மொழி இலக்கியங்கள், அறிவுத் தேட்டத்தில் அவர்களை ஆர்வம் கொள்ளச் செய்தன. இந்திய மதாசாரியர் களின் கருத்துக்களின் பால் மேலை நாட்டவர் கொண்டிருந்த மதிப்பும், நமது இலக்கியங்களின் பால் அவர்கள் கொண்டிருந்த ஈடுபாடும் மேலை நாட்டு நாகரிகத்துடனும், பண்பாட்டுடனும் கொண்ட தொடர்பும் இந்தியர்களிடையே சுய மரியாதையைத் தோற்றுவித்தது. புதிய சூழ்நிலை உருவாக இவை அனைத்துமே காரணங்களாயின.

இந்தப் புதிய ஞானமும், புதிய விழிப்புணர்வும், புதிய நோக்கங்களும், 1885-ல் இந்திய தேசிய காங்கிரஸ் நிறுவப்பட வழி கோலின அரசியல் விடுதலைக்கான ஒரு திறன்மிக்க அமைப்பாய் இருந்தது அது. இந்திய தேசியக் காங்கிரஸ் நிறுவப் படுவதற்கும், 'கலகம்' தோல்வியுற்றதற்கும், பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டதற்கும் இடையிலான முப்பதாண்டுக் காலத்தை— கிட்டத்தட்ட ஒரு தலைமுறைக்கான இடைவெளியை, இந்திய மறுமலர்ச்சியின் பொற்காலம் என்றே கூறலாம். அரசியல்

ரீதியாகப் பார்த்தால் இந்தக் காலம் அமைதியும், உறுதியும் கொண்ட காலமாகும். கோவர்தன்ராம் 1855-ல் பிறந்தார். அதற்குள் தேசத்தின் சில பகுதிகளில் ரயில்வண்டி அறிமுகமாகி யிருந்தது. 1884-ல் தான் தபால்சேவை தொடங்கப் பட்டிருந்தது. கோவர்தன்ராம் பிறந்த ஊரான நதியாத்தில் இருந்து ஐம்பது மைல் தொலைவில் ஆமதாபத்தில் ரணசோத்பாய் என்பவர் ஒரு நெசவாலையைத் தொடங்கி இருந்தார். அச்சுத் தொழிலின் வளர்ச்சி பத்திரிகைகள் தோன்ற சாதகமாய் இருந்தது. ரணசோத்லால் ஜாவேரி, துர்காராம் மேதா, போகிலால் பிராணவல்லபதாஸ் ஆகியோரின் முயற்சியால் கல்வித்துறை வளர்ச்சியுற்றது. சில நூலகங்களும் நிறுவப் பட்டன.

கோவர்தன்ராமிற்கு, சீர்திருத்த இயக்கம் உச்சகட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்த வேளையில் பிறக்கும் நற்பேறு கிட்டிற்று. எனினும், அவர் இளைஞராய் இருந்த போதே காற்று திசை திரும்பத் துவங்கியது. துர்காராம், தளபதிராம், நர்மத், மஹிபத்ராம் ஆகியோரின் முயற்சியால் மந்திரவாதிகள், பில்லி சூனியம், குழந்தை மணம், விதவைகள் மறுமணம், கடற்பபணம் ஆகியவை பற்றிய மூடநம்பிக்கைகள் சிதையலாயின. உருவ வழிபாட்டை எதிர்க்கும் இயக்கம் எல்லையில்லா ஆர்வத்துடன் கைப்பிடிக்கப் பட்டது. பழைமையை முற்றாக எதிர்க்கத் துவங்கினர். மேலைக் கலாசாரத்துடன் இயைந்த எதனையும் விசாரிக்காது ஏற்றுக்கொள்கிற ஒரு பழக்கம் ஏற்பட்டது. பல் கலைக் கழகங்களின் தோற்றத்துக்குப் பின்னே வந்த ஒரு தலை முறை சமூக சீர்திருத்த இயக்க வளர்ச்சியின் தேய்மானமுற்ற நிலையினையே கண்டது.

சமூக மாற்றத்துக்கு வெறும் ஆர்வம் மட்டும் போதுமான தல்ல என்பது உணரப்பட்டது. நர்மத் தம் வாழ்நாளின் இறுதிப் பகுதியில் உணர்ந்ததைப் போல கருத்தோட்டங்களில் அடிப் படையான மாறுதல்களே தேவை என்பதும் அறியப்பட்டது. 1875-ல் நிறுவப்பட்ட ஸ்வாமி தயாநந்தாவின் ஆரியசமாஜமும் அதே ஆண்டில் நிறுவப்பட்ட தியோசபிகல் சொசைட்டியும் (பிரம்மஞான சங்கம்) வங்காளத்தில் நிறுவப்பட்ட பிரம்ம சமாஜமும், அதனைத் தொடர்ந்து 1871-ல் குஜராத்தில் நிறுவப்பட்ட பிரார்த்தன சமாஜமும் இப்புதிய தேவையை உணர்ந்து கொண்ட நிறுவனங்களாகவே திகழ்ந்தன. மேலை நாகரிகத்தை முழுதாக அப்படியே ஏற்கின்ற ஒரு பண்பு இருந்த காலப்பகுதியைத் தொடர்ந்து இப்போது தோன்றிய ஒரு புதிய

உணர்வு சமுதாயத்தில் எண்ண மாற்றத்தைத் தோற்றுவித்தது. மேலைய நாகரிகத்தின் சிறந்த பண்புகளையும் அறிவு பூர்வமான போக்கினையும், விஞ்ஞானபூர்வமான எண்ணங்களையும் மட்டுமே ஏற்று பாரதத்தின் பழமையான ஆன்மீகத்தை விடாது பற்றி இருக்கும் நோக்கமே அது. அது மட்டுமே நாட்டுக்கு நலன் பயப்பது என்று கருதப்பட்டது.

கோவர்தன்ராமின் வாழ்க்கையின் முக்கிய காலகட்டமெனக் கருதப்படும்—அவர் பிறந்த 1855-ம் ஆண்டில் இருந்து அவர் வழக்கறிஞராகப் பணிபுரியத் துவங்கிய 1884 வரையிலான காலம் இந்திய மறுமலர்ச்சியின் பொற்காலமாகத் திகழ்ந்த கால மாகும் 1857-ல் பல்கலைக் கழகங்கள் துவங்கப்பட்ட காலந் தொட்டு 1885-ல் காங்கிரஸ் தோற்றுவிக்கபபட்டது காலமும் அதுவேயாகும்.

கோவர்தன்ராமிற்கும் அவரது காலத்தவர்க்கும் கலா சாரமே கருத்தாக இருந்தது. மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பின் நலம் பயப்பதாகவே இருந்திருக்கும். மக்களின் ஆன்மீகப் போக்கையும் அத்துடன் இணைத்து, கூடவே கீழைக் கலாச்சாரத்தின் மேன் மையை மேலைக் கலாச்சாரத்தின் மேன்மையோடு இணைப்பதே மிகச் சிறப்பானதாக இருந்திருக்கும். அத்தகையதோர் சூழலில் சிறந்ததோர் அறிஞராகச் செயல்படுவதே கோவர்தன்ராமின் சீரிய கடமையாக இருந்தது. வாழ்க்கையை ஒரு கொள்கைக் கென அர்ப்பணிக்கிற தலைமகன் ஒருவனைக் குறித்து கார்லைல் என்பவர் கூறியதாவது: ''உலகில் தன் பணி என்னவென்பதைத் தெரிந்து, அதைச் செவ்வனே புரிந்து, அதற்கான பலனை எதிர் பாரது வாழ்பவனே ஆசீர்வதிக்கப் பட்டவன்.'' கோவர்தன்ராம் இக் கூற்றுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தார். அவருடைய படைப்பாற்றலும் அறிவு வளர்ச்சிக்கே பயன்பட்டது. கோவர் தன்ராமின் வாழ்க்கை கல்வித்துறைக்கே அர்ப்பணிக்கப் பட்டது. அதுவே அவர் தேசத் தொண்டாற்றத் தேர்ந்து கொண்ட பாதை யாகவும் இருந்தது. குஜராத்தும் அதன் மக்களும் அவரது உழைப்பின் பயனை அடைந்தனர். அவர், அவர்களது கலாசார மரபின் பிரதிநிதியெனத் திகழ்கிறார்.

# 2. வாழ்க்கைக் குறிப்பு

கோவர்தன்ராம் மாதவராம் திரிபாதி 1855 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் இருபதாம் நாள், குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த நதியாத் என்னும் இடத்தில் பிறந்தார். பாரதமெங்கிலும்இந்துக்கள் புனிதநாளெனக் கருதும் தசராதினம் அது. அவரது அன்னை சிவகாசி. அவரது கொள்ளுத் தாத்தா மோகன்ராம் புகழ்பெற்ற ஒரு வணிகர் ஆவார். ரத்லம், பரோடா, சூரத், நதியர்த் ஆகிய இடங்களில் அவருக்குப் பல கடைகள் இருந்தன. பெருத்த நஷ்டத்தைத் தொடர்ந்து அக்கடைகளை மூட வேண்டியதாயிற்று. இதுவும் கோவர்தன்ராமின் பாட்டனாராகிய தீரஜ்ராமின் மறைவும் அவரை வெகுவாகப் பாதித்தன. மாதவராம் ஸ்மரிக்கா (மாதவராமின் நினைவாக) என்ற பெயரில் பின்னாளில் தமது குல முன்னோர்களைப்பற்றி கோவர்தன்ராம் ஒரு நூல் எழுதினார்.

குழந்தைப் பருவத்திலே கோவர்தன்ராமிற்கு சாது ஒருவருடன் பழகும் வாய்ப்புக் கிட்டியது. வைணவத்தில் ஆர்வம் தோன்றவும் அதுவே வழி வகுத்தது. இதை அவருடைய நற்பேறு என்றுதான் கொள்ள வேண்டும். தளபதி ராமின் கவிதைகளின் மீதான ஈர்ப்பும், காவ்யதோஹனா என்ற காவியத்தை ஈடுபாட்டுடன் பயின்றதும் அவருக்குக் கவிதைகளை சுவைத்து நுகர்கிற வழக்கத்தை ஏற்படுத்தியது. மனசுக்ராமின் பாதுகாப்பில் கழிந்த இளமைப் பருவமானது அவரது மனதில் சமஸ்கிருதத்தின் மீதும், பண்டை ஆரிய நாகரிகத்தின் மீதும் பற்றினைத் தோற்றுவித்தது.

1868-ல்கோவர்தன்ராம் ஹரிலட்சுமியை மணந்தார். அவருடைய சகோதரர் நரஹரிராம் அதே ஆண்டில் தான் பிறந்தார். அவர் தான் என். எம். திரிபாதி கம்பெனி என்ற பெயரில் தற்போது புகழ்வாய்ந்த நிறுவனமாக, பம்பாயில் திகழ்கிற நிறுவனத்தைத் துவக்கினார். திருமணத்துக்குப் பிறகு எல்பின்ஸ்டன் உயர்நிலைப்பள்ளியில் கல்வி பயில்வதற்கா

பம்பாய் சென்றார் கோவர்தன்ராம்.தமது பதினாறாவது வயதில், 1871-வது வருடத்தில் அவர் வெற்றிகரமாக மெட்ரிகுலேஷனில் தேர்ச்சி பெற்றார். 1874-ம் ஆண்டு, அவருக்குத் துயரத்தையும் தோல்வியையும் தந்த ஆண்டாகும். குழந்தைப் பேற்றின்போது அவரது மனைவி ஹரிலட்சுமி,ராதா என்ற குழந்தையை,ஈன்றதும் உயிர்துறந்தார். கிருஷ்ண வாசுதேவன் கம்பெனி எனப்படும் அவரது குடும்பத்தைச் சேர்ந்த வியாபார நிறுவனம் சிதைந்து போனது. கோவர்தன்ராமும் பி. ஏ. தேர்வில் தோல்வி கண்டார். அடுத்த ஆண்டு அதே தேர்வில் அவர் வெற்றி பெற்றார்.

இதற்கு முன்பாகவே கோவர்தன்ராம் எழுதத் துவங்கியிருந்தார். அத்தனை வருடங்களும் அவர் எழுதிக்கொண்டுதான் இருந்தார். தமது வாழ்வின் இலக்கைக் குறித்து அவர் இந்தப் பருவத்தில் தீவிரமாக சிந்திக்கத் துவங்கி இருந்தார். தமது இருபதாவது வயதில் தம்முடைய வாழ்வையும் பணியையும் குறித்து அவர் தெளிவான திட்டம் ஒன்றினை அமைத்துக் கொண்டார். அதனைச் செயல்படுத்தவும் தொடங்கினார். அதன்படி அவர் சட்டக்கல்வி பயின்று, பம்பாயில் வழக்கறிஞராகத் தனித்துச் செயல்பட வேண்டும். எவருக்கும் அடிபணிந்து பணிபுரியாது தமது நாற்பதாவது வயதில் ஓய்வு பெற்று தம்மை முற்றிலும் எழுத்துக்கும் படிப்புக்கும் அர்ப்பணித்துக் கொண்டு அதன் மூலம் நாட்டிற்கும் சமூகத்துக்கும் சேவைபுரிய எண்ணங் கொண்டார்.

1875-ல் அவர் லலிதா கௌரியை மணந்தார். 1877-ல் 'ஃப்ரெண்டிலி சொசைட்டி' என்னும் நண்பர்கள் குழுவின் முன்பு அவர் ஒரு கட்டுரையைப் படித்தார். 'நடைமுறைத் துறவறம் என நான் கருதுவதற்கு ஓர் உத்தேசமான வடிவம்' என்பதே அக்சட்டுரையின் பொருளாகும். பல்வந்தராய் தாக்கோர் கூறுமாப்போல இக்கட்டுரையை அவரது வாழ்வின் கொள்கை, நோக்கம், இயல்பு ஆகியவற்றின் அடிப்படை எனவே கொள்ளலாம்.

1879-ம் ஆண்டின் தொடக்கத்தில் கோவர்தன்ராம் பவநகர் சமஸ்தானத்தின் திவானின் தனிக் காரியதரிசியாகப் பதவியேற்றார். 1883-க்கு முன்பாக அவர் சட்டப்படிப்பில் தேர்ச்சியுறாதபடி அவரது உடல் நலக்கேடு தடை செய்தது. பின்னர், பல நல்ல வேலை வாய்ப்புகளை மறுதலித்து விட்டு பம்பாயில் வழக்கறிஞராக அவர் அமர்ந்தார். அவ்வேலையைத் துவங்கி அவர் தமது காலிலேயே நிற்கத் துவங்கிய போது

அவருக்கு வயது இருபத்தியொன்பது. தமக்கு நாற்பத்து மூன்று வயதாகும் தறுவாயில் அவர் வழக்கறிஞர் தொழிலைத் துறந்தார்.

1885-ல் அவர் 'சரஸ்வதி சந்திரன்' என்னும் நாவலை எழுதத் துவங்கினார். 1887-ல் முதல் பகுதியை எழுதி முடித்தார். 'ஸ்நேக முத்திரா' (காதலின் அடையாளம்) என்ற நீண்ட கவிதை நூலை அவர் அதற்கு முன்பே எழுதத் துவங்கி இருந்தார். ஆனால், அதனை 1889-க்கு முன்னால் வெளியிட இயலவில்லை. 1892 (ஜூன் 2) 'சரஸ்வதி சந்திர'னின் இரண்டாவது பாகம் வெளியிடப்பட்டது. 1896-ல் இக் காவியத்தின் மூன்றாம் பாகமும் முற்றுப் பெற்றது. எனினும் அரசியல் நிலவரங்களின் காரணமாக 1898-வரை அதன் வெளியீடு தாமதமாயிற்று.

அவர் திட்டமிட்டிருந்தபடி ஓய்வு பெறுவதற்கான காலம் நெருங்கி விட்டது. அவரது குறிப்புப் புத்தகங்கள் முழுவதிலும் இந்தப் பிரச்சினையைக் குறித்த ஆழ்ந்த சிந்தனைகளே நிறைந்துள்ளன. அவரது சித்தப்பா மன்சுக் ராமையும் அவர் சமாதானப் படுத்த வேண்டி இருந்தது. முடிவாக, தமது நாற்பத்தி மூன்றாம் வயதில் சுறுசுறுப்பான வாழ்க்கையில் இருந்து ஓய்வு பெறுவதற்கான அனுமதி பெற்றபோது அவர் பெரிதும் மகிழ்ந்து போனார். உடனடியாக பம்பாயை விட்டு வெளியேறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அதற்காக அவர் பலவற்றை துறக்கவும், பற்பல துன்பங்களுக்கு ஆளாகவும் வேண்டியிருந்தது ஓய்வு பெற்றபின் வரக்கூடிய இன்னல்களை எப்படி சமாளிப்பதென்பது பற்றி உறுதிப்பாடு ஏதுமில்லையெனினும் அது குறித்து அவர் கவலை கொள்ளவில்லை. அவர் வெற்றிகரமான வழக்கறிஞராய் இருந்தார். தமது ஆற்றல் முழுவதையும் எழுத்துப் பணிக்கு அர்ப்பணிப்பதற்காக அவர் தமது தொழிலைத் துறந்தார். அதுவே அவர் நெஞ்சத்தை மகிழ்ச்சியால் நிரப்பிற்று. ஓய்விற்கான அந்தத் திட்டம் அவரது நீண்ட நாளைய கனவாக இருந்தது. விக்ரம ஆண்டு லலித பஞ்சமி நன்னாளில் (1898 அக்டோபர் பத்தொன்பதாம் தேதி) அவர் பம்பாயை விட்டுப் புறப்பட்டார். அவ்வேளையில் அவருக்கு கட்ச் சமஸ்தானத்தின் திவான் பதவியை அளிக்க முன் வந்தனர் அதனை ஏற்காமல் எழுத்துப் பணியிலேயே தம்மை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டார். சில பெரிய கட்சிக்காரர்கள் தம் சார்பாக வழக்குகளை நடத்தித் தரும்படியும் அவரை வற்புறுத்தியதுண்டு. அவர் அதனையும் மறுத்து விட்டார்.

1900-ல் அவர் 'சரஸ்வதி சந்திர'னை முடித்தார்; டிசம்பர்த் திங்கள் இருபத்தி மூன்றாம் நாள் நான்காவதும் கடைசியுமான அந்த உரைநடைக் காவியத்தை அவர் எழுதி முடித்தார். **'சமலோக்கல்'** என்ற பத்திரிகையில் **'சாக்ஷர்ஜீவன்'** என்ற பெயரில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வந்தார். சில சொற்பொழிவுகளும் ஆற்றினார். 1898 டிசம்பரில் அவர் லாத்தி மற்றும் ஜூனாகத் ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்தார். பம்பாய்க்கும் சில முறை சென்று வந்தார். 1902-ம் ஆண்டு ஜனவரி எட்டாம் தேதி அவரது மகள் லீலாவதி மரணம் அடைந்தாள். அவருக்குப் பெரிய அதிர்ச்சி. தனது மகளின் வாழ்க்கையை அடியொற்றி'லீலாவதி ஜீவன்கலா'வை எழுதினார். 1905-ல் அது வெளியிடப்பட்டது. அந்நூலை எழுதிக் கொண்டிருக்கும் போதே பலமுறை அவர் மனமுடைந்து தேம்பி அழுததாய் குறிப்பிட்டுள்ளார் பல்வந்த்ராய் டாக்கர்.

கோவர்தன்ராம் 1905-ல் குஜராத்தி சாகித்ய பரிஷத் என்னும் அமைப்பிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 'பண்டைய குஜராத்தி இலக்கியத்தின் வரலாறு' என்னும் பொருளில் அவர் தலைமை உரை நிகழ்த்தினார். 1906-ல் 'தயாராமின் இலக்கியப் பணிகள்' என்னும் கட்டுரையை சாகித்ய சபையின் முன் சமர்ப்பித்தார்.

கோவர்தன்ராம் யோக சாத்திரத்தை மிகவும் ஆழ்ந்து நுணுகிப் பயின்றார். முழுமையான துறவறம் பற்றியும் தீவிரமாகச் சிந்தித்தார். எனினும் துறவை ஒரு சுறு சுறுப்பான வாழ்வின் பகுதியாகத்தான் கொள்ள முடிந்ததே தவிர சந்நியாசியாகப் போவதை அவர் மனம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவரது உடல் நலம் எப்பொழுதுமே சீராக இல்லை. அஜ்மீர், புஷ்கர், ஜயப்பூர், கோகுல், மதுரா ஆகிய இடங்களுக்குப் புனிதப் பயணம் சென்று வந்ததன் பின் உடல்நலம் மேலும் சீர்கேடு அடைந்தது. 1907-ம் ஆண்டு ஜனவரி நான்காம் நாள் மாபெரும் எழுத்தாளரும் முனிவருமான கோவர்தன்ராம் இயற்கை எய்தினார். குஜராத் துயரில் ஆழ்ந்தது.

உள்நாட்டிலும், வெளி நாட்டிலும் இருந்து வந்த பல செய்தித்தாள்கள் அவருடைய குணத்தையும், சாதனைகளையும் பற்றிப் புகழ் அஞ்சலி செலுத்தின. 1907, பிப்ரவரி பதிமூன்றாம் நாள் வெளிவந்த லண்டன் இதழ், 'டைம்ஸ்' அவரது இலக்கிய சாதனைகளைக் குறித்துப் போற்றியது. அவரது நினைவாக சிறப்பு இதழ்கள் வெளியிடப்பட்டன. 'சமலோச்சக்', 'வசந்து' சிறப்பிதழ்கள் குறிப்பிடத் தக்கன.

# 3. கோவர்தனராமின் வாழ்வியல் நோக்கு

'அவர் வாழ்க்கையை சீராகவும் முழுமையாகவும் கண்டார்' என்று சோபாக்கிளிஸ் என்ற கிரேக்க நாடகாசிரியர் குறித்து மாத்யூ ஆர்னால்ட் என்னும் ஆங்கிலக் கவிஞர் குறிப்பிட்டார். இந்தக் கூற்று கோவர்தன் ராமிற்கும் பொருந்தும். அவரது வாழ்வு—படைப்பாற்றலும், நிறைவும் இணக்கமும் கொண்டு திகழ்ந்தது. வாழ்க்கை 'கடவுள் தரும் பரிசு' என்றார் ரவீந்திர நாத் தாகூர். தமது கவிதையொன்றில் தாகூர் தாம் கடவுளின் அழைப்பினைப் பெற்றுக் கொண்டு புனிதப் பயணத்துக்கு ஆயத்த மாக இருப்பதாகக் குறிப்பிட்டிருந்தார். கோவர்தன்ராமின் பார்வை சற்றே வேறுபட்டிருந்தது. அவரைப் பொறுத்தவரை வாழ்க்கை என்பது பொறுப்புணர்ச்சி வாய்ந்ததாகும். அப் பொறுப்பை முழுமனதோடு உணர்ச்சி பூர்வமாகப் புரிந்து கொண்டு, தாம் ஏற்றுக்கொண்ட கொள்கை வழி நிற்பதே வாழ்வு என அவர் கருதினார். வாழ்வின் பொருளையும், நிறை வையும் தேடலே அவரது பணியாக இருந்து வந்தது. இளமையி லேயே தமது வாழ்க்கைப் பாதையை வரையறுத்துக் கொண் டார் அவர். அதன் பின், பிற ஈர்ப்புகளையும், சோதனை களையும், சிக்கல்களையும் கடந்து தாம் திட்டமிட்டபடி வாழ்வை நடத்தி தனது குறிக்கோளை அடைய பாடுபட்டார். வாழ்நாள் முழுவதும் அவர் மேற்கொண்ட இம்முயற்சியே குஜராத்தைச் சேர்ந்த பிற இலக்கியவாதிகளில் இருந்து அவரைத் தனித்துக் காட்டுகிறது.

நாட்டுப் பற்றும், ஆன்மீக நாட்டமும் கோவர்தன்ராமின் வாழ்வில் முக்கியமான இரண்டு விஷயங்களாகும். எந்நேரமும் நாட்டு நலனைப் பற்றியே ஓயாத சிந்தனையில் அவர் ஈடுபட்டி ருந்தார் என்பதனை அவரது நாட்குறிப்புகளும், எழுத்துகளும் எடுத்துக் காட்டுகின்றன. அவருக்கு மிகப் பிடித்தமான 'கடமை' பற்றிய அவரது குறிப்பேடுகள் அனைத்தும் கூறுகின்றன. 'கடமை' என்பது அவரைப் பொறுத்த அளவில் ஒரு நேர்மையான கோட்பாடு மட்டுமன்று. அவரது லட்சியங்களின் வடிவம் ஆகும்.

தனது குடும்பத்துக்கும் தனது நாட்டிற்கும் ஒருவர் ஆற்ற வேண்டிய கடமைகள் இந்த லட்சியத்தின் மையமாக விளங்கினும் ஒருவர் தமக்கு ஆற்றிக் கொள்ளக் கூடிய கடமையே அனைத்தினும் மேலானதாம். மானுடத்தின் சிகரத்தை எட்டி வாழ்வின் உன்னதங்களை நிறைவுறப் பெறுவதற்காக அவர் கொண்டிருந்த தாகத்தின் வெளிப்பாடே கடமையின் பால் நாட்டமாக வெளிப்பட்டது எனலாம்.

வாழ்வுப் பற்றிய சிந்தனையிலிருந்து கோவர்தன்ராமின் தத்துவங்கள் பிறந்தன. 'சரஸ்வதி சந்திரன்' நாவலில் பற்பல தத்துவங்கள் கூறப்பட்டுள்ளன. அவை அனைத்தும் அவரது கல்வியும், சிந்தனையும், 'நடைமுறைத் துறவி' என அவர் வாழ்ந்த வாழ்வும் தந்தவையே ஆகும். வாழ்க்கை பற்றியும், வாழும் முறைமைகள் பற்றியும்,அவர் அறிவு பூர்வமான மேலோட்டமான கருத்துக்கள் மட்டும் உடையவராக இருந்தாரில்லை அந்தக் காலத்து அறிஞர்கள் துறவறம் மேற்கொள்ளுதலைத் தீவிரமாக நம்பினர். கோவர்தன்ராமும் தமது குமரப் பருவந் தொட்டு அவ்வாறே எண்ணி வந்தார். ஏற்கெனவே கூறியுள்ள படி தமது இருபதாவது வயதினிலேயே தமது எதிர்காலம் மற்றும் வாழ்க்கைக்கான திட்டத்தை அவர் வகுத்து வைத்திருந்தார். தமதுஇருபத்தி இரண்டாவது வயதிலேயே'நடைமுறைத் துறவறம்' என்பது பற்றி கட்டுரையை வடித்தார். அதற்கான கரு பதினெட்டாவது வயதிலேயே அவர் மனத்தகத்தே அரும்பி விட்டது. சுந்தரகிரி விஷ்ணுதாஸ் பாவா என்னும் கதாபாத்திரம் ஞானமும் பக்தியும் இணைந்து படைத்ததாகும். தமது வாழ்வை கடமை, அறிவு, பக்தி ஆகியவற்றின் கலவையாகவே அவர் வாழ்ந்தார். எனினும் அவர் மனம் உண்மையான வாழ்க்கையையும், தனி மனிதனின் ஆன்மாவையும் ஏற்றுக் கொள்ளும் அறிவுப் பாதையையே வேதாந்தமெனக் கொண்டது.

அவர், பவநகர் திவானின் தனிச்செயலாளராக இருந்த போது கூட உடன் பணிபுரிந்தவர்களும், அவரை அறிந்தவர்களும் ''கோவர்தன் கடவுளைத் தேடிக் கொண்டிருக்கிறார்'' என்று அடிக்கடி சொல்வதுண்டு. கட்டாய ஓய்வைத் தேடிக்கொண்ட பின் அவர் யோகப்பயிற்சி புரிய ஆரம்பித்தார். முழுத் துறவறம் பூண்டு விடுவதைப் பற்றியும் ஆலோசித்தார். தமது ஐம்பதாவது வயதில் அவர், ''குடும்பத்தைத் துறந்து துறவியாகி விடுவதே சிறந்ததாயிருக்குமா''என்று தம்மைத் தாமேவினவிக்கொண்டார். இறுதியில், 'இல்லறத்துறவியாக இருப்பதே சரியான தீர்வு' என்று உறுதி பூண்டார்.

பொதுப்பணிகளுக்கான திட்டமொன்றை வகுத்தார். எனினும், அடிப்படையில் அவர் ஒரு முனிவரே, முற்றுந் துறந்தவரே. ''திரு. திரிபாதி 'பொது' மனிதனாகவோ குடிமகனாகவோ ஆவதென்பது தங்கள் எல்லைக்குட்பட்ட விஷயமல்ல என்பதை நான் கூறியுள்ளேன். அத்தகுதியைப் பெற குறிப்பிட்ட செயல் ஒன்றைப் புரிய வேண்டும். நானாக செய்ய, அல்லது செய்விக்கப்பட விரும்பும் அச்செயல் யாதெனில், கல்வியறிவுடையோரும் அற்றோருமாகப் பயனற்ற வாழ்வு வாழும் என் நாட்டு மக்களை தங்களைக் காத்துக் கொள்ளும் வல்லமையும் மேன்மையும் உடையோராக ஆக்குவதே ஆகும்.''— இத்தகைய குறிப்புகள் அவரது குறிப்போடுகளில் உள்ளன.

அவரது கதாநாயகன் சரஸ்வதி சந்திரன் தீவிரமான நாட்டுப் பற்று உடையவனாக படைக்கப் பட்டிருக்கிறான். இத்தகைய நாட்டுப் பற்று அவரது ஆன்மீகத்தின் ஒரு பகுதியாகவே விளங்கு கிறது. தேசபக்தர்கள் என்போர் உள்ளச் செம்மையுடையவர்கள் என்பதே அவரது படைப்புகளில் காணக் கிடைக்கிறது. அவ்வகையில்தான் அவர்கள் நாட்டிற்கு நல்ல விதத்தில் பணியாற்ற முயலும் என்பது அவர் கருத்து. அறிவினை வளர்ப்பதே நாட்டுப்பணி புரிய நல்ல வழி என்று அவர் உணர்ந்தார். அதனாலேயே, தமது ஆற்றல் முழுவதையும் தமது அறிவை மேம்படுத்திக் கொள்வதிலும் அறிஞராகத் திகழ்தலிலுமே பயன்படுத்தினார். தமது படைப்பாற்றலை மொழியின் மூலமே வெளிப்படுத்த எண்ணங் கொண்டார். அதனால் வாழ்நாள் அனைத்தும் தமது அறிவையும் ஞானத்தையும் உருவாக்கு தலிலேயே செலவு செய்தார்.

கோவர்தன்ராம் சுறுசுறுப்பான செயல்பாடு மிக்க வாழ்க்கை முறையிலிருந்து விலகாமலேயே துறவு பூணுவதையே வாழ்க்கை யின் தத்துவமாகக் கண்டார். அதுவே அவரது வாழ்க்கையிலும், எழுத்திலும் எதிரொலித்தது. 'நடைமுறைத் துறவு' என்கிற தத்துவத்தில் பன்முகப்பட்ட வெளிப்பாடுகளாகவே அவர் படைத்த இலக்கியங்கள் திகழ்ந்தன. செயலற்ற, சாத்வீகமாக துறவுமுறையை அவர் எதிர்த்தார். அவரது லட்சிய நல்வாழ் வானது கடமையையே வலியுறுத்தியது. ஆன்மீகத்தையே தனது பலமாகவும் குறிக்கோளாகவும் கொண்ட கடமை. மதங்கள் கூறும் வெளிச் சடங்குகள் அவரைக் கவரவில்லை. ஆன்மிக முக்கியத்தும் வாய்ந்தவையே அவரை ஈர்த்தன. உண்மையான ஆன்மிகம் என்பதுஒருவர் தமது குடும்பத்துக்கு ஆற்றும் கடமையிலேயே வெளிப்படுகிறது என்பது அவரது கருத்தாகும். ஒருவர் உண்மை

யானமகிழ்ச்சியை அவ்வாறு தான் பெற முடியும். மேலை நாட்டுத் தொடர்பிற்குப் பின் பாரதத்தில் தோன்றிய கலாசார மறுமலர்ச்சி கோவர்தன்ராமைப் போன்ற சிந்தனையாளர்களை, நமதுபக்தி இலக்கியங்களில் கூறப்பட்டிருந்த 'கடமை' என்னும் லட்சியத்துக்குப் புத்துயிர் அளிக்கச் செய்தது. தமது 'நடைமுறை வேதாந்தம்' பற்றிய சித்தாந்தத்தை பாரதத்திற்கு வழங்க ஸ்வாமி விவேகானந்தர் அவதரிக்காத காலம் அது. விவேகானந்தரின் வருகைக்கு முன்பே, கோவர்தன்ராம் ஆன்மீகத்தையும் கடமையையும் இணைத்த தத்துவத்தை உருவாக்கினார்.

கடமையாற்றுவதிலும் செயல்பாட்டிலும் இருந்து விலகாமலேயே துறவறம் பூண, "நீங்கள் இருந்த இடத்தில் இருந்தே உங்கள் பணிகளைச் செவ்வனே புரியுங்கள்" என்றார் அவர். "உங்களுடைய முதல் கடமை உங்கள் குடும்பத்திற்கே. அவர்களை ஆரோக்கியம் உடையவர்களாக ஆக்குங்கள். உங்கள் பணிகளைப் பகிர்ந்து கொள்ளச் செய்யுங்கள். நாட்டிற்காக உழையுங்கள். அதன் தேவைகளையும், குறைகளையும், குற்றங்களையும் கண்டு தெளியுங்கள். அவற்றை தீர்க்கவும், குறைக்கவும் வழியறிந்து செயல்படுங்கள். துறவறம் என்பது தன்னலமற்று மனிதகுல முழுமைக்கும் தம்மை அர்ப்பணித்துக் கொள்ளுதலே ஆகும். தன்னலம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு வாழ்பவன் இறுதியில் துன்பத்தை அடைவான்" என்றும் அவர் கூறியுள்ளார். வாழ்வு, துயர் நிரம்பியது. பிறருக்காக வாழ்வதில் தான் வாழ்வின் பயனும், அமைதியும் உள்ளது. எனவே, அவர், 'நடைமுறைத் துறவறம்' பற்றிய தமது கட்டுரையில், "நான் பணிபுரிய வேண்டுமெனில், அதிலும் ஞானமுள்ளோரைப்போல பணிபுரிய வேண்டுமெனில் பொதுநலமே அப்பணியின் மையமாக இருத்தல் வேண்டும். அப்பணியினாலேயே மனிதகுலத்தின் மேன்மை உருவாகவும், உயரவும் வேண்டும்."

கோவர்தன்ராமின் நாட்டுப்பற்று அவரது மதம்பற்றிய தேடலிலும், ஆன்மீகத் தேடலிலும், துறவறத்திலுமே ஆதாரமாக உள்ளது என்பதை நாம் அறிவோம். "நமது நாட்டில் எத்தனை தீமைகள்குடி கொண்டுள்ளன என்பதை ஆராய்ந்து அறியுங்கள். எண்ணற்ற மதங்கள், மக்களைப் பிரித்து அவர்கள் மனங்களைக் குறுக்குகின்றன. பிழைமலிந்த நச்சுத்தன்மை பொருந்திய சமூகவியலின் பிடியில் உழல்கிறது நாடு, வெறுப்பின்றி, தீவிரமான மகிழ்ச்சியுடனும்,பெருமையுடனும்அந்நிலையைப் பூண்டு கொண்டு உள்ளது. கனத்த அறியாமை, காரிருளாய் மக்களின் மனதைச்

சூழ்ந்து கொண்டுள்ளது. பெருத்த வலிய மலைகள் என மூட நம்பிக்கைகள் அவர்தம் மனங்களில் வளர்ந்து வருகின்றன. நாட்டின் சீர்திருத்தம் பற்றிய எண்ணத்தில் நாட்டமின்றி இருக்கின்றனர். மக்களின் அறிவு அழிகிறது. கற்றோர் பெருந்த சுயநலவாதிகளாக இருக்கின்றனர். மக்களின் ஆன்மாவை அரித்துண்ணும், மூளையைச் செயலிழக்க வைக்கும் வறுமையெனும் கொடிய ராட்சசன் எதிர்ப்பாரின்றி எங்கணும் ஆட்சி புரிகிறான். அத்துடன், பல்வேறு சமூக, அரசியல் வேறுபாடுகளும், சச்சரவுகளும், பிற பிழைகளின் அறியாமையின் விளைவுகளும், நாட்டினை அழிவுப் பாதையில் செலுத்துகின்றன. நாட்டின் உள், வெளி விவகாரங்களில் உதவுவாரற்ற இரங்கத்தக்க நிலையே நிலவுகிறது. தேனொழுகப் பேசும் பாதுகாவலர்கள் என்று சொல்லிக் கொள்ளும் வெளி நாட்டினர், நாட்டைப் பல்வேறு வழிகளில் உறிஞ்சுகின்றனர். அனைத்தையும் துச்சமெனத் துறந்த துறவிகளின் நெஞ்சத்தையும் கசிய வைக்கும் பாரதமாதாவின் பலத்த, தொடர்ந்த, கேட்பாரற்ற முனகலோ இரவின் குறட்டையொலிகளுக்கும், செவிடாக்கும் பகல்நேரக் கூச்சல்களுக்கும் இடையே அமிழ்ந்து போகிறது'' என்றார் அவர்.

கோவர்தன்ராமைப் பொறுத்த அளவில் இதுதான் ஒரு சந்நியாசி பணி ஆற்ற வேண்டிய துறையாகும். அவரது சொற்கள், அக்காலத்தில் நாடு இருந்த நிலையைத் தெள்ளென விளக்குகின்றன.

''உலகனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் பரந்த மனம், இயற்கையின் பால் நேசம், இடையறாத உழைப்பு, நல்லனவற்றைப் போற்றி வளர்க்கிற பாங்கு எல்லா வித துயர்களிலும் இருந்து காக்கவல்ல அமைதி ஊற்றெடுக்கிற மனம், தெய்வம் விட்ட வழி என வாழ்வை நடத்திச் செல்கிற போக்கு. நண்பர்களே! இவையே நான் போற்றும் அழகிய துறவறத்தின் பண்புகள். எனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளபடி, என் எளிய மனம் இதனையே எண்ணி எண்ணி ஏங்குகிறது.''

கோவர்தன்ராமின் தத்துவம் அவரைச் செயலற்றவராக்கி விடவில்லை. அக் காலத்தில் நடைபெற்ற பல நற்செயல்களில் அவர் பங்கேற்றார். நதியாதில் அவர் ஒரு கூட்டுறவுக்கடையை ஒரு சமயம் ஆரம்பித்து வைத்தார். ஒரு முறை மாவட்டக் கலெக்டர், குடிமக்கள் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பதில் இவரது உதவியைக் கோரினார். அந்தச் சமயத்தில் இவரது உடல்

Indian ... Study
117393

நலம் பாதிக்கப்பட்டிருந்த போதிலும், அதனைப் பொருட் படுத்தாமல் அவ்வேளையில் உதவி புரிந்தார். அவரது குறிப்பேடு களில் 'கடமை' என்கிற வார்த்தை பல இடங்களில் குறிக்கப் பட்டுள்ளது. 'கடமை' பற்றிய அவரது உணர்வும் அதைத் தம் வாழ்வில் அவர் செயல் வடிவில் காட்டிய தன்மையும் நெஞ்சை நெகிழ்த்துவதாகவே உள்ளன.

எனினும், நாம், கோவர்தன்ராமை ஒரு எழுத்தாளர் என்கிற முறையிலேயே நன்கு அறிவோம். 'சரஸ்வதி சந்திரன்' அவர் கொண்டிருந்த வாழ்க்கைத் தத்துவங்களின் வடிவமேயாகும். கலை, தத்துவங்களின் வெளிப்பாடாக இல்லாமல் இருக்கலாம். ஆயினும், கலாபூர்வமான பரிமாணங்களையும் அழகியலையும் பாதிக்காமல் எந்தப் பெரிய கலை வடிவமும் வாழ்க்கையைப் பற்றிய பார்வையை தன்னுள் அடக்கியதாகவே இருப்பது தவிர்க்க இயலாது. வாழ்வியலை எதிரொலிக்கிற பாகங்கள் இல்லாத இலக்கியங்களே இல்லை எனலாம். அத்தகைய பகுதிகள் இலக்கியத்தின் மகத்துவத்தைக் குறைப்பதாகாது. எனினும் 'சரஸ்வதி சந்திர'னில் அத்தகைய பகுதிகள் இருப்பதைக் குறையெனவே விமரிசகர்கள் கருதுகிறார்கள். ஆயினும், இத்தகைய விமரிசகர்கள் இத்தகைய பகுதிகள் எங்ஙனம் இச்சிறந்த நாவலின் கலைத்தன்மையை குறைக்கிறது என்று நிரூபிக்க இயலாதவர்களே. இது அவரவர் ரசனையைப் பொறுத்த விஷயமாகவே உள்ளது. கல்வி, கடமை போன்றவை பற்றிய அவரது திட்டவட்டமான கருத்துக்கள் இந்தக் காவியத்தில் எதிரொலிக்கவில்லை. கோவர்தன்ராமின் வாழ்வியல் பற்றிய தத்துவங்களையே மையமாகக் கொண்டிருப்பினும் அழகியல் உணர்வுடனே ஆக்கப்பட்டுள்ளது சரஸ்வதி சந்திரன் நாவல். ஷேக்ஸ்பியரின் தத்துவங்கள் பற்றிக் கூற முற்பட்ட கே. ஜே. ஸ்பால்டிங், ''எடுத்த எடுப்பில் ஷேக்ஸ்பியரிடம், தத்துவ ஞானியின் கூறுகள் சில தென்படலாம். கவிஞர்களும், கலைஞர் களும் தத்துவஞானிகளாக இருக்கலாம். காரணங்கள் கூறி விளக்குவதிலும், விவாதத் திறமையிலும், தத்துவஞானிகளையும் விட மிகத் தெளிவாகத் தமது எண்ணங்களை வெளிப்படுத்துவதில் வல்லவர்களாகவும் இவர்கள் இருக்கலாம். அநுபவத்தால் உய்த்துணர்ந்து அறிபவர்கள், கொள்கையளவில் நிற்போர் என அவர்களிலும் இரு பிரிவு உண்டு'' என்கிறார். கோவர்தன்ராம் முந்தைய வகையைச் சேர்ந்தவர். ஸ்பால்டிங் கூறுவது போல உய்த்துணர்ந்து அறியும் தத்துவஞானிகள் தாம் கண்ட உலகை உள்ளது உள்ளபடி சிந்திக்கத் தொடங்குகின்றனர்.

கோவர்தன்ராமிற்கு முன்பு நம்மிடையே சீர்திருத்தவாதிகளும், பழைமைவாதிகளும், பிற்போக்காளர்களும் இருந்து வந்திருக்கின்றனர். சீர்திருத்தவாதிகள், சமுதாய சீர்திருத்தங்களிலேயே கவனம் செலுத்தி வந்தனர். அந்த வகையில் கோவர்தன்ராமைச் சீர்திருத்தவாதி என்று சொல்லிவிட முடியாது. முன்னேற்றமான கருத்துக்கள் உடையவர் என்று கூறலாம். திருமணம், காதல், தொழில் பற்றியெல்லாம் அவருடை கருத்துக்களே நம்மை இவ்வாறு எண்ணவைக்கின்றன. மேலை நாகரிகத்தின் அறிவாண்மையையும், கீழைக் கலாசாரத்தின் ஆன்மிகத்தையும் தம்முள் நிறைத்துக் கொண்டார். கடமை பற்றிய உயர்ந்த லட்சியங்களையும் சமூகம் பற்றியும் விழிப்புணர்வையும் உள்ளடக்கியதே அவர் கைக்கொண்ட ஆன்மிகம். சீர்திருத்தவாதிகள் என்போர் பாரதத்தின் பழைமைப் பண்புகள் அனைத்தையும் புறந்தள்ளுவோராக இருந்தனர். கோவர்தன்ராமோ இந்திய தத்துவ இயலிலும், மரபுகளிலும், கொள்கைகளிலும், பழக்க வழக்கங்களிலும், வாழ்க்கை முறைகளிலும் சிறந்தனவற்றைப் போற்றினார். அவற்றைப் பாதுகாக்க விரும்பினார். அதற்காகவே அவற்றைத் தம் கலையிலே கலந்தார்.

சமூக விழிப்புணர்வு என்பது வாழ்வு பற்றிய அவரது கண்ணோட்டத்தில் ஒரு பகுதி. செயலில் இருந்து விலகாத துறவே அவரது வாழ்வு பற்றிய கொள்கையாம். ஜீவாத்மா, பரமாத்மா, பிரம்மா என வேதாந்தம் விரிக்கும் முப்பொருளில், புலன்களால் உணரத்தக்கது, புலன்களுக்கு எட்டாதது என்ற இரண்டு பிரிவுகளை அவர் கண்டார். ஜீவாத்மாவும், பரமாத்மாவும் உணரத்தக்கன. ஏனெனில் அவற்றுக்கு என்று தனி இயல்புகளும்; குணங்களும் உண்டு, நிர்க்குணமாய் துலங்கும் பிரும்மம் புலன்களுக்கு அப்பாற்பட்டது. ''கடமையே சிறந்தது. துறவு என்பது கடமையைக் கொல்வதல்ல'' என்கிறான் அவரது கதாநாயகன் சரஸ்வதி சந்திரன் அதுவே கோவர்தன்ராமின் 'சாத்தியத் துறவு' கொள்கையுமாகும்.

அடிப்படையில், கோவர்தன்ராம் ஒரு சிந்தனையாளர் ஆவார். அவருடைய குறிப்புப் புத்தகங்கள் தத்துவார்த்தமான பிரச்சினைகள் குறித்து அவர் எப்போதும் சிந்தித்துக் கொண்டிருந்ததைக் காட்டுகின்றன. எனினும் அவர் அவற்றை செயல் சாராத, அறிவுசெறிந்த மரபளவுகளாக மட்டுமே கண்டு நிறைவுறவில்லை. அவருடைய தேடல் முழுமுதல் பற்றியதாகும். ஆகவே அவரது சிந்தனை அனைத்தும் யோகத்தை எதிரொலிப்பதாகவே இருந்தது. இறுதியாக அவர், 'பயன்படுதல் தத்துவத்தை'

உருவாக்கினார். சமூகத்தின் நன்மைக்காகத் தனது நலன்களைத் தனிமனிதன் தியாகம் செய்ய முனைதலையே 'பயன் படுதல்' என்று அவர் குறிக்கிறார். 'மாபெரும் சித்தம்,' 'மாபெரும் சக்தி' என்பன பற்றியும் அவரது குறிப்புப் புத்தகங்கள் கூறுகின்றன. விறகினுள் மறைந்திருக்கும் தீயைப்போல புலனாகாதாவாறு இருப்பது உலகைப் படைக்க வேண்டும் என்கிற இறைவனின் 'மாபெரும் சித்தம்'. சமஸ்கிருதத்தில் அவர் எழுதிய இருபத்தியொரு செய்யுட்களில் இதை அறியலாம்.

'மாபெருஞ் சித்தம்' என்பது உட்செறிந்தது. நடைமுறைச் செயல்கள் அதனை வெளிப்படையாக்கும். தனிச்சித்தம் தெய்வ சித்தத்துடனோ, மாபெருஞ் சித்தத்துடனோ இரண்டறக் கலக்கும் போது 'தான் எனும் சிந்தை' 'பயன் படும்' நிலையை அடைகிறது. இதனையே அவர் சமஸ்கிருதத்தில், ''மாபெருஞ் சித்தமே என் சித்தமாகும் போது (மாபெருஞ்சித்தத்தின் சிந்தனையே எனது சிந்தனையாகும் பொழுது) மாபெருஞ்சித்தம் என்ற காற்றின் சிற்றலைகள் ஓய்வு கொள்கின்றன'' என்கிறார். ஷாப்பென் ஹாரின் 'சித்த சக்தி'யைப் பற்றி முதன் முதலாக அறிந்து கொள்ள நேரிட்டபோது, ''என் மூளையைத் தவிர இன்னொரு மூளையிலும் இதே கருத்து உள்ளது என்பதை நான் அறிந்து கொண்ட முதல் சந்தர்ப்பம்'' என்கிறார். ''சாவுக்குப் பிறகு வாழ்வு உண்டா?'' என்கிற வினாவையும் அவரது குறிப்பேடு களில் காணலாம். கட்டாயம் மறுபிறவி என்று ஒன்று இருந்தே ஆக வேண்டும் என்று தர்க்க வாயிலான விவாதங்களின் அடிப் படையில் நிறுவுகிறார் அவர். இறப்புக்குப் பின்னர் தமக்கு என்ன நேரும் என்பதை எழுதும்போது அவர், தத்துவங்களாலும் கவிதைகளாலும் தாம் வளர்த்துள்ள தமது மன உணர்வுகளே எஞ்சும் என்கிறார். ஆரோக்கியமான வழிகளில் வளராது, ஒழுங்குக்கு உட்படாதவை அழியும், ஒழியும்.

புகழ்பெற்ற தத்துவஞானி வித்யாரண்யரின் 'பஞ்ச தஷி'யின் பெரும் தாக்கத்துக்கு கோவர்தன்ராம் ஆளானார். வித்யாரண்யர் வெளியிட்ட 'ஜீவன்முக்தம்' என்கிற இலட்சியத்தை தமது 'அத்யாத்ம ஜீவன்' என்ற நூலின் உட்கிடக்கையாக இவர் படைத்துள்ளார். தன்னலமற்ற கடமை உணர்வு, பற்றற்ற நிலை ஆகிய இவரது லட்சியங்களை உருவாக்க இவையே பெரிதும் துணை புரிந்தன.

விடுதலை பெற்ற மனிதன் (ஜீவன் முக்தன்) பலனைப் பற்றிய எண்ணமேயின்றி, தன்னை சமூகப்பணிகளில் இணைத்துக்

கொள்வான். அதன் மூலம் அவன் செயல்படுவதின் வழியாக செயலற்றவனாகவும் ஆகிறான். கதாநாயகன், சரஸ்வதி சந்திரன் பலவிதமான இன்னல்களுக்கு ஆளாயினும் இறுதியாக சமூகத்திடமே கொண்டு வரப்படுகிறான். வாழ்க்கையின், சமுதாய உணர்வினை விலக்கி வைக்காமலே இந்த நாவலிலும் 'சிநேக முத்ரா'விலும் மையக் கருத்தான அன்பு எடுத்தாளப் பட்டுள்ளது. கோவர்தன்ராமின் வாழ்வியல் நோக்கு, கலை வடிவம் பெறும் தன்மைக்கு இது மற்றுமொரு சான்றாகிறது.

# 4. 'சரஸ்வதி சந்திரன்'

பதினைந்து ஆண்டுக்கால எல்லையான 1887-லிருந்து 1901 வரைக்குட்பட்ட காலத்தில் 'சரஸ்வதி சந்திரன்' நான்கு பாகங்களாக வெளியிடப் பட்டது. உரைநடை என்பதே தோன்றி வளராத ஒரு மொழியில் 1887-ம் ஆண்டில் இந்நூல் வெளியிடப் பட்டது. பிற்காலத்தில் இலட்சிய உரைநடை எவ்வாறு இருக்க வேண்டுமோ அதற்கேற்ப வளமான உரைப்பகுதிகளைத் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது இந்நூல். நாவலின் கருப்பொருள் நீங்கலாக, வேறு சில கருத்துகளையும் சீர்திருத்த வாதிகளின் முன்னே வைக்கிறது. இந்நூல் மேலைத் தொடர்பின் விளைவாய் அமைந்த நவீனத்துவமும், சமகாலத்துவமும் கலந்த சூழலில் நமது கலாசார மரபு மாறாத நிலையில் அழகியல் சார்ந்த தேடலின் விளைவேயான இந்தியத் தன்மையும் காணக் கிடைக்கிறது. மேலை நாட்டின் அறிவார்ந்த மரபும் அவரது வாழ்வியல் நோக்குடன் இரண்டறக் கலந்தே கிடக்கிறது. ஒரு வாழும் உலகினை, உயிர் ததும்பும் காதல் கதையை 2500 பக்கங் களில் அழகுறப் படைத்தளித்துள்ளார் ஆசிரியர். நாவலுடன் ஒன்றாமல் தனித்து நிற்கிற சில வாழ்வியலின் எதிரொளியான பகுதிகளும் இந்நூலில் உள்ளன என்பதை ஏற்கனவே குறித்துள்ளோம். ஒரு கலைஞர் என்ற விதத்தில் கோவர்தன்ரா மின் நுண்ணுணர்வுகளையும் பொறுப்புணர்வையும் மறுத்துவிட முடியாது.

சமூக மேம்பாடும், வீடு மற்றும் குடும்பம் சார்ந்த பிரச்சினை களுமே நாவலின் மையக் கருத்துகளாய் உள்ளன. அவை, தம்மினும் அகன்ற சமூக, அரசியல் விளைவுகளையே நோக்க மாகக் கொண்டே படைக்கப் பட்டுள்ளன. சுயம் என்பதன் விரிவாகவே உள்ளது இந்நாவல்.

சிறந்து விளங்கும் பல பண்புகளை இணைத்தும் தொகுத்தும் வழங்குகிற பண்பை இந்திய நாவல் ஆசிரியர்கள் பலர் கொண்டி ருந்த காலம் அது. புதிய இந்தியத் தன்மை என்பதற்கு இது வழி

வகுக்கும் என்று அவர்கள் கருதினார்கள். உதாரணத்துக்கு ரவீந்திரநாத் தாகூரையே எடுத்துக் கொள்வோம். அவர் மறு மலர்ச்சியின் பின்விளைந்த மனிதாபிமானம் பற்றிய மேலை நாட்டுக் கருத்துக்களின் தாக்கத்துக்கு ஆட்பட்டவராகவே இருந்தார். ஆயினும், அவர் கொண்டிருந்த மனிதாபிமானம் குறித்த கருத்துக்கள், கீழை ஆன்மிகத்தின் சாறாக அவர் பெற்ற கவிதா உணர்வே. உபநிட தத்துவங்களும் சமஸ்கிருத இலக்கியங் கள் கூறும் வாழ்வியல் நோக்கும் வைணவத்தின் தீவிர பக்தி உணர்வும் கலந்ததே ரவீந்திரரின் ஆன்மீக மனிதாபிமானம். அவரது 'கோரா', கோவர்தனராமின் 'சரஸ்வதி சந்திரன்' ஆகிய இரண்டு நாவல்களுமே உண்மையில் இந்தியத் தன்மைக்கான தேடல் முயற்சிகளே.

நாவலின் அமைப்பு முறையைக் கவனித்தால், முதல் பாகம் நாவலின் ஒரு பாத்திரமாகிய புத்திதான் என்பவரின் நிர்வாகம் பற்றியும், இரண்டாவது பாகம் குணசுந்தரியின் குடும்ப வாழ்க்கையைப் பற்றியும், மூன்றாவது பாகம் ரத்னநகரின் அரசியல் பற்றியும் நான்காவது பாகம் கதாநாயகன் சரஸ்வதி சந்திரனின் உணர்வுகள் பற்றியும் இருக்கிறது. எனவே, இறுதிப் பகுதி, சமூக, அரசியல், மதம் பற்றிய எல்லாக் கருத்துக்களின் திரட்சியாகவும் உள்ளது.

சுவர்ணப்பூரின் திவானாகிய புத்திதானின் மகன் பிரமதத் தனின் மனைவி குமுதம் என்பவளைக் கதாநாயகன் சந்திப்பதும், அதற்காக அவன் சுவர்ணப்பூர் சென்றடைதலுமே நாவலின் ஆரம்பம். எனவே, புத்திதானின் நிர்வாகமும் சுவர்ணப்பூரின் அரசியல் சிக்கல்களும் கூறப்பட்டுள்ளன. முதல் பாகத்தில் இறுதியில் குமுதம் தன் பெற்றோர்களைக் காண சுவர்ணபூரில் இருந்து புறப்படுகிறாள். அவளுடைய குடும்பமும் வாசகனுக்கு அறிமுகப்படுத்தப் படுகிறது. இவ்வாறாக, அடுத்த பகுதியில் குண சுந்தரியின் குடும்ப வாழ்க்கையும் சித்தரிக்கப் படுகிறது. குமுதத்தின் தந்தை ரத்னநகரின் திவான் என்பதால் மூன்றாவது பகுதி அந்தப் பகுதியைப் பற்றியதாகும். விஷ்ணுதாஸின் துறவிகள் மடத்தில் சரஸ்வதி சந்திரனுடன் (இரண்டாம் பாகத்தில்) மறைந்து போனதாக கருதப்பட்ட குமுதம் மீண்டும் இணைத்து வைக்கப் படுகிறாள்.

காதலர்கள் உணர்ச்சிகள் மேன்மைப்படுதலையும், உயரிய உணர்வு நிலையை அவர்கள் அடைவதையும் கோவர்தன்ராம் சித்தரிக்க விழைகிறார். ஆதலினால் அவர்கள் வாழ்க்கையின் கசப்புகளையும், குரூரங்களையும் அநுபவித்தாக வேண்டும்.

இறுதியில் வேட்கையில் இருந்து விடுதலை பெற்றவர்களாய், இறைவனோடு இணையும் தகுதி பெற்றவர்களாய் நாட்டின் விதியைக் கண்கூடாய் காணத் தக்கவர்களாய் ஆக்கப்பட வேண்டும். நான்காம் பாகத்தில் முப்பத்தியொன்பதாம் அத்தியாயத்தில்—நலவாழ்வுப்புற நகரான—கல்யாண் கிராம் திட்டம் காணப்படுகிறது. செயற்பாடுடன் கூடிய துறவறம் பற்றிய தமது கருத்தை கதாநாயகனின் வாயிலாக கோவர்தன்ராம் இப் பகுதியில்தான் வெளிப்படுத்துகிறார். ஒருத்தியின் மீதான காதல் உலகோர் மீதான அன்பாக உருமாற்றம் கொள்வதைக் சித்திரிக்கிறார் ஆசிரியர். காதலின் மேன்மையும் இந்தியத் தன்மைக்கான தேடலும் இணையாக வெளிப்படுகின்றன.

எல்லாக் கலை வடிவங்களுக்கும் உள்ளமைப்பாய் இருப்பது கட்டமைப்பே ஆகும். கருத்தின் வெளிப்பாடே வடிவமாய் ஆகிறது. இவை இரண்டிற்கும் இடையேயுள்ள தொடர்பினை கொள் கலனுக்கும் உள்ளீட்டிற்கும் உள்ள உறவெனக் காணுதல் இயலாதது. நாவல் என்னும் வடிவம் தளர்ந்தது. கலைஞனை இத்தகைய உள்ளீடும் வடிவமும் குறித்த எல்லைகளுக்குள் கட்டுப் படுத்தாதது. நாவலைக் கலப்பற்ற கலை வடிவமெனக் காணத் தயங்குகிற போக்கு சிலரிடம் உண்டு. கட்டற்ற வடிவமைப்பே அதற்குக் காரணம். இந்நிலை தரமற்ற நாவலாசிரியனின் கரத்தில் கட்டற்ற சுதந்திரத்தை வழங்கும் உரிமம் ஆகிறது. தற்கால வாசகனுக்கு நாவலின் அமைப்பு நிறைவு அளிக்காதிருக்கலாம். பண்டிதர் காலத்தைச் சார்ந்த விமர்சகர்களும், காந்தி காலத்தின் விமர்சகர்களும் இது பற்றி ஏராளமாக எழுதியுள் ளனர். இதைப் 'புராணம்' என்கிறார் ஆனந்த சங்கர் துருவா. 'உரைநடைக் காப்பியம்' என்கிறார் விஸ்வநாத் பட். சமஸ்கிருத விமர்சகர்களைப் பின்பற்றி தோலாராய் மன்காட் இதனை, ''சகலகதா'' என்கிறார். 'சரஸ்வதி சந்திரனி'ன் அமைப்பைப் பற்றிக் கூறுகையில் ராம் நாராயணன் பாதக் அத்தகைய அமைம்பு முறையினால் நாவலின் எழிலுணர்வு பாதிக்கப்படவில்லை என்றே கூறுகிறார். ஒருபெரிய நதியின்போக்கி னோடு அதனை ஒப்பிடுகிறார் அவர். சரஸ்வதி சந்திரன் கதையை நதியாகவும், புத்திதான் குணசுந்தரி, ரத்னகிரி, சுந்தர்கிரி, கொள்ளையர் ஆகியோர் பற்றிய கதைகளைக் கிளைநதி களாகவும் கொள்கிறார் அவர். பல பின்னல்களாகப் புனையப்பட நீண்ட கூந்தலாகக் கொள்கிறார் பலவந்த்ராய் தாக்கோர். விஷ்ணு பிரசாத் திருவேதிக்கோ இந்நூல் போராபுதூரின் வடிவ மாகக் காட்சியளிக்கிறது. கலாசாரத்தின் கதைக்கு இடப்பட்ட

உறையாகவே இக்காதல் கதையைக் காண்கிறார் விஜயராம் வைத்யா. உமாசங்கருக்கோ, இந்நாவல், உரை நடைவடிவில் வடிக்கப்பட்ட காலத்தின் கவிதையாகும்.

வடிவமைப்பின் தளர்ச்சியைக் காரணமாக்கி இந்நாவலின் தரத்தினை குறைகூற நாமநாராயண பதக், ஆனந்த சங்கர் ஆகிய விமர்சகர்கள் விரும்பவில்லை. வடிவத்தின் காரணமாக நாவல், கலைத்தன்மை அற்றதென கருதப்பட்டாலும் பிற தகுதிகளினால் அது சிறப்பானதே என வாதிடுகிறார் ஆனந்த சங்கர், உலகின் பல இலக்கியங்கள் இத்தன்மை உடையனவே.

கதேயின் 'வில்ஹெல்ம் மேஸ்தர்' என்னும் நூலை கோவர் தன்ராமும் கண்டிருக்கக் கூடும். அந்நாவலின் முன்னுரையில் கார்லைல், ஸ்கெலெகலின் கூற்றைக் குறிப்பிடுகிறார். ''புதுமை யானதும் அதிசயமானதுமான இந்நூலை மதிப்பீடு செய்ய நாம் விழைகிறோம். நாவல் என்பது பற்றிப் பொதுவாக நாம் கொண்டுள்ள கருத்தின் அடிப்படையிலேயே நாம் இதனையும் படிப்போம், புரிந்து கொள்ளவும் விரும்புவோம். நாவல் பற்றிய நம் கருத்து என்னவெனில், நமது பழக்கவழக்கங்கள் நம்பிக்கை கள் ஆகியவற்றைக் கத்தரித்துச் சேர்ப்பதும், எதிர்பாராத சம்பவங்களின் இணைப்பும், மனம்போன போக்கில் எழுப்பப் படும் கோரிக்கைகளின் சேர்க்கையுமேயாகும். இது ஒரு குழந்தை' நிலவையும், நட்சத்திரங்களையும் எட்டிப் பறித்து தன் சொப்புப் பெட்டிக்குள் நிரப்பிக் கொள்வது போன்றதே. இதிலே துயரம் என்னவெனில் நம்மில் பலரிடம் பெட்டிகள் உள்ளன. அவை களில் சிலவோ மிகவும் சிறியவை!''

மார்க் ஸ்கோரெர் கூறும் ''உள்ளீடு'', ''அடையப்பட்ட, உள்ளீடு'' ஆகிய இரண்டின் கலாபூர்வமான கலப்பாகவே சரஸ்வதி சந்திரன் நூல் உள்ளது. 'நோக்கித்' திற்கும் 'செயல் பாட்'டிற்கும் இடையே எவ்விதமான குழப்பமும் காணப்பட வில்லை.

'சரஸ்வதி சந்திரனை'ப் போன்றதோர் காவியம் ஏராளமான பாத்திரங்களை நிகழ்ச்சிகளையும் சுற்றியே வனையப்படல் வேண்டும். அவற்றுள் பல பாத்திரங்களும் நிகழ்வுகளும் சமகாலத்தை பிரதிபலிப்பதாகவும், சில உண்மை நிகழ்ச்சிகளை நினைவூட்டுவனவாகவும் கூட இருக்கலாம். கதாபாத்திரங்களில் பலர் நிஜமாந்தர்கள் என்றே பொதுவாக நம்பப்படுகிறது. பவநகர் திவான் சியாமள் தாஸ்தான் புத்திதான், என்றும்

நதியத் மன்னர் சாந்தாராம்தான் விஷ்ணுதாஸ் என்றும், ஆசிரியரின் மனைவி லலிதாகௌரியே குண சுந்தரி என்றும், சியாமள்தாஸின் மகள் அனுப் குண்வர்பாவே அலக் கிஷோரி எனவும் கருதப்படுகிறது. சுய சித்திரிப்பே கதாநாயகன் என்றும் சொல்லப் படுகிறது. இது பற்றி 1893-ல் தமது குறிப்பேடுகளில் கோவர்தன்ராம் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: ''இந்த 'சரஸ்வதி சந்திரன்' நாவலில் நான் என்னவர்களுக்கு ஆற்று வேண்டிய பல கடமைகளை நிறைவேற்றியுள்ளேன். விஷ்ணுதாஸர் 'வேதாந்தம்' உரைக்கும் போது நான் என் சித்தப்பா மனசுக்ராமிற்கு மிக விருப்பமான விஷயத்தை உரைத்து அவருக்கு என் கடமையை ஆற்றியுள்ளேன். மேலும் அவர் எனக்கு அன்புடன் வழங்கிய அறிவுரைகள் வீணாகி விடவில்லை என்பதையும் காட்டி உள்ளேன். எனது கருத்துகளுடன் ஒவ்வாதனவற்றை நான் ஏற்றுக் கொள்வதில்லை. இதனால் சுதந்திரமான மனம் ஆற்ற வேண்டிய இலக்கியப் பணியை ஆற்றுகிறேன். அவ்வாறே வைஷ்ணவ மார்க்கத்தை விரித்துரைத்து விளக்குவதன் மூலமாக நான் என் தந்தைக்கு ஆற்ற வேண்டிய கடமையினையும் நிறைவேற்றி உள்ளேன். குணசுந்தரியை சித்திரித்ததன் மூலம் என் மனைவிக்கும் எனது கடமையை ஆற்றியுள்ளேன். என் மனைவி, எனது கதாநாயகிக்குச் சமமானவள் என்று நான் எண்ணவில்லை. பாத்திரப் படைப்பைக் குலைத்து கதாநாயகியின் இயல்புகள் என் மனைவியின் குணத்தைப் போன்றதே எனக் குறுக்கியும் விடவில்லை. என் மனைவி எளியவள். கதாநாயகியாகி விட முடியாதவள். இக்கதாநாயகியின் சில பண்புகள் என் அன்னையின் பண்புகள். பல்வேறு விதங்களில் இச்சித்திரம் உயிரோட்டமானதாகிறது.''

ஒரு கலைப்படைப்பு என்பது நிச்சயமாக அவ்வாறு திட்டமிட்டு நிர்மாணிக்கப்படும் ஆக்கம் அல்ல. எழுத்தாளரின் கற்பனை குழைத்த சித்திரமாய், உயிரோவியமாய் ஒவ்வொரு பாத்திரமும் தனக்கேயுரித்தான தன்மை கொண்ட சுதந்திர ஜீவியாய் அமைகிறது. நிஜ மாந்தரை ஒத்து சில பாத்திரங்கள் அமைவது உண்டுதான். எனினும் நிஜமாந்தரும், கதாபாத்திரமும் ஒன்றேயெனக் கொள்ளல் இயலாது.

'சரஸ்வதி சந்திரனி'ல் இடம் பெறும் பாத்திரங்கள் தனி மனிதர்கள். மாதிரிகள் அல்ல. பழைய மரபையொட்டிய பெயர்களே அவர்களுக்குச் சூட்டப் பட்டுள்ளன. நற்பண்புகளையும், தீய பண்புகளைக் குறிப்பிடுவது போல துஷ்டராய், ஷாதராய், புத்திதானா என்று பெயர்கள் இடப்பட்டுள்ளன. ஆயினும்,

அப்பாத்திரங்களின் குணச்சித்திரங்கள் முழுக்க முழுக்க அவ் வாறே புனையப் படவில்லை.

கதாநாயகன் சரஸ்வதி சந்திரன், குமுத், குஸும், குணசுந்தரி, சந்திரகாந்த், தரங்சங்கர் ஆகிய பல பாத்திரங்கள் உயிர்த்தன்மை கொண்டுள்ளன. உணர்ச்சிகளையும் பாத்திரப் படைப்பையும் ஒன்றிணைக்கிற ஆசிரியரின் திறமையே இதற்குக் காரணம். உலகம் இறைவனின் திருவிளையாடலே என்று உணர்த்தும் ராமாயண, மகாபாரத மரபுகளின் வழியே தம் படைப்பை அளிக்க எண்ணம் கொண்டார் ஆசிரியர். எனவே, அவர், வாழ்வில் பலதரத்து மக்களையும், பலவிதமான நிகழ்ச்சி களையும் தமது படைப்பில் பாத்திரங்களாகவும் சம்பவங் களாகவும் படைத்து அளித்துள்ளார். மன்னர்கள், அமைச்சர்கள், ஆங்கிலேய அதிகாரிகள், இந்திய அதிகாரிகள், துறவிகள், நடுத்தர மற்றும் கீழ்த்தர வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள், பத்திரிகையாளர், எழுத்தர், வியாபாரிகள், கொள்ளையர், தீவிரமான தேசபக்தர்கள், ஆங்கில மோகம் கொண்டோர் என்று பல பாத்திரங்கள் இந்நாவலில் நடமாடுகின்றன. தாம் கண்ட சமுதாயத்தைச் சித்திரிப்பதோடு நின்று விடாமல், அத்தகைய சமூதாயத்தில் லட்சியம் எதுவாக இருக்க வேண்டும் என்பதையும் ஆசிரியர் கூறுகிறார். தமது பாத்திரங்களின் மன ஓட்டங்களைச் சித்திரிப்பதன் மூலம் அவர் இதனைச் செய்கிறார். அப்பாத்திரங்கள் எதிர்கொள்கிற உள்மன உளைச்சல்கள், போராட்டங்கள், சந்திக்கிற சோதனைகள், காண்கிற தீர்வுகள் அல்லது தீர்மானத்துக்குட்படாது குழம்புதல் ஆகியவற்றை தம் எழுத்துக்களில் வடிக்கிறார். கோவர்தன்ராமின் இலக்கிய ஆற்றலையும் படைப்புத் திறனையும் இவையே நிறுவு கின்றன. இவை அனைத்தையும் அவர் இருபதாம் நூற்றாண்டிற்கு முன்பே சாதித்தது அவரது மேதைமையைக் காட்டுகிறது.

'சரஸ்வதி சந்திர'னின் முடிவைப் பற்றி விவாதிப்பதில் குஜராத் விமரிசகர்கள் களைப்பதேயில்லை. அதிலும் முக்கியமாக, 1. குமுதம் ஏன் சரஸ்வதி சந்திரனை மணக்கவில்லை? 2. குஸும் ஏன் சரஸ்வதி சந்திரனை மணக்க முன்வர வேண்டும்? 3. குஸும் தானாகவே முன்வரினும், குமுதத்தைக் காதலிக்கிற சரஸ்வதி சந்திரன் ஏன் அவளை ஏற்றுக் கொள்ள ஒப்ப வேண்டும்? என்கிற மூன்று விஷயங்களையும் பற்றி எப்போதும் சர்ச்சைகள் இருந்த படியே இருக்கின்றன. குமுதத்தின் உள்மன வளர்ச்சி மறுமணத்தை ஒப்பவில்லை என்று கூறலாம். மறைந்த செளபாக்யதேவி

ஒப்படைத்த குழந்தையை வளர்ப்பதில் அலக்கிற்கு அவள் துணை புரிவதே இயல்பானதாக இருக்கும். அவள் வேட்கையை வென்றவள். சந்திராவளியை சந்திப்பதற்காகவும், மதம் சார்ந்த விஷயங்களுக்குத் துணை புரியவும் அவள் சந்திரகிரிக்கு வரலாம். தன் சகோதரியைச் சந்திப்பதற்காக சில சமயங்களில் பம்பாய்க்குச் செல்லலாம். கண்ணீரில் தெய்வத்தைக் காணும் பக்குவத்தை அடைந்து விட்டவள் அவள். மறுமணம் அவளுக்குச் சரிப்பட்டு வராது.

'சரஸ்வதிசந்திரனை ஒரு கலைப்படைப்பு' என விமரிசகர்கள் ஏற்றுக்கொண்ட பின்னர் அதன் முடிவை விவாதத்துக்கு உள்ளாக்குவது உகந்தது அல்ல. பாத்திரப் படைப்பும், சம்பவக் கோவையும், ஆசிரியருமே ஒரு பெரிய கலைப்படைப்பின் முடிவைத் தீர்மானிக்கிற இயல்பான விஷயங்கள். இறுதிப் பகுதியின் குமுதத்தின் மறுமணத்திற்கான சாத்தியங்களே இல்லை என உணர்த்தும் அகச்சான்றுகள் போதுமான அளவுக்கு உள்ளன. மரபிற்கும், பொது விருப்பத்துக்கும் தலைவணங்கியே இந்த முடிவினை கோவர்தன் ராம் அமைத்தார் என்று கொள்ளுதல் சரியன்று. திருமணத்துக்கான மறுப்பு குமுதத்தின் பெற்றோர்களான வித்யாசதுரிடமிருந்தும் குணசுந்தரியிடமிருந்தும் வருவதில்லை. குமுதத்திடமிருந்தே வருகிறது. வாழ்வின் நிறைவு திருமணத்தில் இருக்கிறது என்று கோவர்தன்ராம் கருதவில்லை. வாழ்வின் முழுமையை உணர்ந்து கொள்ள திருமணம் தவிர்க்க முடியாததென்றும் அவர் எண்ணவில்லை. வாழ்வை நிறைவுறச் செய்வதில் காதலின் பங்கை அவர் ஒத்துக் கொள்கிறார் அந்தக் காதலைச் செம்மைப் படுத்த அவர் முனைந்தார். அக்காதலில் இருந்து மிருக வேட்கையைத் தவிர்த்து இந்தியக் கலாசாரத்தின் சீரிய கூறுகளுடன் அதனை இணைத்தார். சரஸ்வதி சந்திரனின் முடிவு மேலைத் துன்பியல் இலக்கியங்களை பிரதிபலிப்பது அல்ல. கடமையை மையமாகக் கொண்டு, படிப்படியாக வளர்ந்து, இறுதியாகத் துறவறம் மேற்கொள்ளும் முடிவைப் படைக்கிறது அது. எனவேதான் நலவாழ்வுத் திட்டமான கல்யாண்கிராமில் நாவல் முடிவு பெறுகிறது. இத்திட்டம், பொருளாதார மேம்பாட்டினை மட்டுமின்றி, ஆன்மீக மேம்பாட்டினையும் தழுவியதாகும். தனிவாழ்வின் மேம்பாட்டையும், துறவறத்தையும் வலியுறுத்துதாகும் ஆகவே, முடிவு, எழுத்தாளரின் வாழ்வு பற்றிய நோக்கத்தின் முழுமையான வடிவமே கொண்டுள்ளது.

பாத்திரங்களின் சிக்கல் உள்முகமானதாகவும் உள்ளன. வெளித் தாக்கத்தால் ஏற்படுவதாயும் உள்ளன. இந்து சமுதாயத்

தின் பழக்க வழக்கங்களும், நடைமுறைகளும் அவற்றை மேலும் சிக்கலாக்குகின்றன.பாத்திரங்கள் மரபார்ந்த இந்துக்களைப்போல பிரச்சினைகளை எதிர்கொள்வது தவிர்க்கப் பட்டுள்ளது. இந்து தர்மம் என்கிற இறுகிய எல்லைகளைக் கடந்தவர்களாகவே புத்திதானும், வித்யாசதுரும் படைக்கப் பட்டுள்ளனர். சரஸ்வதி சந்திரன் பாத்திரப் படைப்பு, ஷேக்ஸ்பியர் நாடகப் படைப்பான ஹாம்லெட்டை நினைவு படுத்துவதாக இருக்கிறது.

'சரஸ்வதிசந்திரன்' பாத்திரப் படைப்பே அனைத்திலும் தலை சிறந்தது எனினும் கோவர்தன்ராம் படைத்துள்ள சில பெண் பாத்திரங்கள், அதிலும் முக்கியமாக குமுதம், ஷேக்ஸ்பியரும் தாந்தேயும் படைத்துள்ள பெண் பாத்திரங்களோடு ஒப்பு நோக்கத் தக்கவை என்று எண்ணுகிறார் ஆனந்த சங்கர். சரஸ்வதிசந்திரனில் உள்ள பெண்பாத்திரங்களின் படைப்பை பல்வந்தராயும் நுணுகி ஆய்ந்துள்ளார். சிறு பாத்திரங்களுக்கும் தனித்துவமும், சிறப்பும் தரும்படி சித்திரித்துள்ளார் கோவர்தன் ராம்.

பொதுக் கருத்துக்கள், கதையோட்டத்திற்குத் தடையாய் உள்ளன என்பது நுணுக்கமற்ற விமர்சனமாகும். கோவர்தன் ராம் எப்போதும் பொறுப்புணர்வுள்ள ஒரு கலைஞராகவே இருந்து வந்துள்ளார். நாவலில் கூறப்படும் கருத்துகள் யாவும் மையக்கருத்தினை வலியுறுத்துவனவே. கதையுடன் ஒட்டாமல் அவை வழங்கப்படவில்லை. சந்தர்ப்பத்திற்கேற்ப, ஒரு வாக்குவாதமோ, அறிவுரையோ வழங்கப்படும் சமயங்களில் தான் பெரும்பாலும் இத்தகைய பொதுக்கருத்துக்கள் கலைத் தன்மை பிறழாமல் எடுத்தாளப் பட்டுள்ளன. சமஸ்தானங்கள், காமமும் காதலும், யாகங்கள் புரிதல், கடமையும் கல்வியும், தன்னை அறிதல் என்பன பற்றியே இவ்வாறு கருத்துகள் கூறப்பட்டுள்ளன. கோவர்தன்ராம் சமூக சீர்திருத்தவாதிகளுக்கும் பிற்போக்காளர்களுக்கும் இடையில் நின்றார் என்பதையும் கீழை மற்றும் மேலை நாகரிகங்களின் சிறப்பான இயல்புகளைக் கலக்க முயன்றார் என்பதையும் அத்தகைய பகுதிகள் எடுத்துக்காட்டு கின்றன.

இந்தியக் குடும்பத்தின் பிரச்சினைகளை கோவர்தன்ராம் எடுத்துக்காட்டும் விதம் குறிப்பிடத்தக்கதாகும். சரஸ்வதி சந்திரனின் இரண்டாம் பாகத்தின் கருத்தே அதுதான். அவ ருடைய பாத்திரங்கள் மாதிரிகள் அல்ல. ஆனால் உண்மைச் சித்திரங்களாக வழக்கப்பட்டுள்ள குடும்பங்கள் வகை மாதிரி களே. எனவே லக்ஷ்மிநந்தன், புத்திதான் மற்றும் வித்யாசதுரின்

குடும்பச் சித்திரங்கள் சமூகவியல் கண்ணோட்டத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்துக் குடும்பத்தின் ஒற்றுமை பற்றிய சிக்கல்களை ஆசிரியர் நமது கவனத்துக்கு கொண்டு வருகிறார். கோவர்தன்ராமின் பல விமர்சகர்களில் உத்தம்லால் திருவேதியே இந்தத் தன்மையை விரிவாக ஆராய்ந்துள்ளார்.

வீடு, குடும்பம், அரசு, மதம் ஆகியவை பற்றிய பரிணாம வளர்ச்சியையே கோவர்தன்ராம் தனது எழுத்துகளில் காட்டுகிறார். தன்னை அறிதலின் மூன்று வழிகளான ஞானம், கடமை, பக்தி ஆகியவற்றின் கூட்டினால் நலமெய்தலையே கோவர்தன்ராம் குறிப்பிடுகிறார். வேதாந்தம் கூறும் முப்பொருள்களான ஆத்மா, பரமாத்மா, பிரம்மா என்பதற்கு பதிலாக புலன்களுக்கு எட்டக் கூடியவை, அவற்றுக்கு அப்பாற்பட்டவை என இரண்டினை அவர் அளிக்கிறார். அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த பிரச்சினைகளுக்கும் அவர் இந்தக் கருத்தோட்டத்தின் போக்கிலேயே தீர்வு காண்கிறார். கடமையையும் செயல் சார்ந்த துறவறத்தையும் முன்மொழிகிறார்.

காதல் வேட்கையின் தன்மையை அவர் முழுவதுமாக தள்ளி விடவுமில்லை. வேட்கையைப் பற்றி மட்டுமே விரிவு படுத்தவும் இல்லை. வேட்கையின் வேகம் ஒரு உடற்கூறு அம்சமே என்று புரிந்து கொள்கிறார் அவர். அத்தகைய வேட்கையைத் துறத்தல் அல்ல அவருடைய தத்துவம். அவ்வுணர்வை செம்மைப்படுத்தி மேம்பாடடைதலே ஆகும். ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாத நிலையில் காதல் நீடிக்காது என்கிறார் அவர். காதலர்கள் பல முறைகள் சந்தித்து நீண்ட காலத்துக்குப் பிறகே திருமணத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும் என்கிறார் அவர். அவரைப் பொறுத்த அளவில் திருமணம் என்பது இரண்டு உடல்களின் கலப்பு அல்ல. ஆன்மாக்களின் கலப்பு.

சமஸ்தானங்கள் ஒரு நாள் ஒன்றுபடும் என்ற அவரது கூற்று இன்று மெய்யாகி விட்டது. ஆங்கிலேயர் தெய்வ சித்தத்தால் அரசாளப் பிறந்தவர்கள் எனக் கொண்டார் அவர். ஆங்கிலேயர் பால் அபிமானம் கொண்டவராயும் அவரது ஆட்சித் திறனைப் பாராட்டுபவராயும் இருந்தார். அவரது அரசியல் கருத்துகள் இவற்றையே அடிப்படையாகக் கொண்டவை. இந்தியா ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது அவருக்கு வருத்தம் தரவில்லை என்பது நமக்கு வருத்தம் தரலாம். இந்திய மக்களின் நன்மைக்கென இறைவனே ஏற்படுத்தியதுதான் ஆங்கிலேயர் அரசு என்று அக்காலத்தைச் சேர்ந்த வேறு சில சிந்தனையாளர்களைப்

போலவே இவரும் கருதினார். ஆங்கிலேய அரசு குறித்த அவரது எண்ணங்களை 'சரஸ்வதி சந்திரனி'லும் வேறு சில எழுத்துக் களிலும் காணலாம்.

கோவர்தன்ராமின் உரை நடையைப் படிப்பது சிறந்த பயன் அளிக்கும். அவருடைய திறமைக்கு, 'சரஸ்வதி சந்திர'னின் முதல் அத்தியாயமே போதுமான சான்று. எளிமையும் எழிலும் கலந்த நடையில் மிகச் சிறந்த கருத்துகளை வெளியிடுகிறார் அவர், அவரது நடையில் சமஸ்கிருதக்கவியான பாணர் மற்றும் ஆங்கில உரையாசிரியர் பர்க் ஆகியோரின் தாக்கத்தைக் காணலாம். உரை நடையின் தாளகதியை உணர்ந்து அழகிய பகுதிகளை ஆக்கியுள்ளார். குஜராத்தி மொழியின் மிகச் சிறந்த கனிந்த உரை நடைக்கு 'சரஸ்வதி சந்திரன்' ஒரு அற்புதமான உதாரணம் ஆகும். சமஸ்கிருதமும், ஆங்கிலமும், பேச்சு வழக்கான குஜராத்தி மொழியுடன் விரவிக்கிடக்கிற அழகிய உரை நடை அவருடையது.

புதிய பாடல்களும், மொழிபெயர்ப்புப் பாடல்களும் தன்னுள் கொண்டிருந்தமையும் இந்நாவலின் வெற்றிக்குக் காரணமாகும்.

சிறிய சமஸ்தானங்கள், ஆங்கிலேய அரசு, சமூக அமைப்புகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும், மேலைத் தொடர்பு ஏற்படுத்திய விளைவுகளையும், அந்தக் காலத்தில் நிலவிய இந்துக் குடும்பங்கள் பற்றியும் கூறுவதால் இந்நாவல் அந்த கால கட்டத்திற்கானது என்று கொள்ளுதல் தவறாகும். அந்தப் பிரச்சினைகளையெல்லாம் என்றும் நிலவும் கொள்கைகளும் இணைப்பதினால் நாவல் அந்த அபாயத்தை கடந்து விடுகிறது. மனித குலம் முழுமைக்கும் எக்காலத்துக்கும் பொருந்துவதாகிறது. காதல் தோன்றுவதும், தோல்வியுறுவதும், துன்ப உணர்வுகளைக் கடத்தலும், மகிழ்ச்சியில் முடிவதுமான மானுடப்பிரச்சினையே நாவலின் கரு. எனவே இந்நாவலை மிகச்சரியாக, விஜயராய் வைத்யா, 'காதல் கதையின் போர்வையில் இருக்கும் கலாசாரத் தின் கதை' எனக் கணித்தார். காதலிலேயே அனைத்தையும் இணைத்து அதன் துன்பங்களிலும் துயரங்களிலுமே மற்ற வற்றைக் காட்டுகிறார் கோவர்தன்ராம். இந்தக் காவிய நாவலுக்கு விஷ்ணுபிரசாத் திரிவேதி எழிலார்ந்த அஞ்சலியை மிகச்சிறந்த வகையில் தெரிவித்துள்ளார்.

# 5. 'சிநேகமுத்ரா', மற்றும் பிற கவிதைகள்

மறைந்து போன முதல் மனைவி ஹரிலட்சுமியின் நினைவைப் போற்றியே கோவர்தன்ராம் 'சிநேகமுத்ரா'வை எழுதினார். ''விதிகுந்திடம்' என்ற கதையும் 'இருதயருதிட்டாஷ்கம்' என்ற நூற்றியொரு சமஸ்கிருதப் பாடல்களின் தொகுப்பும் கூட அந்த நினைவில் தோன்றியவையே.

மனைவியை இழந்த சோகத்தைத் தாண்டிச் செல்லவில்லை சமஸ்கிருதப் பாடல்கள். தம் மனைவியின் மீது அவர் கொண்டிருந்த ஆழ்ந்த காதல் அப்படியே வெளியாகிறது. பாடல்கள் கோவர்தம்ராமின் உணர்வுகளை வெளிப்படுத்துவனவாக இருக்கின்றன. கால ரீதியாக கணக்கிட்டால் 'சிநேகமுத்ரா'தான் முதலில் எழுதப்பட்ட நூலாகிறது. 1877-ல் அவர் அதை, எழுத ஆரம்பித்தார். 1887-ல் முடித்தார். அதே ஆண்டில்தான் 'சரஸ்வதி சந்திரன்' முதல் பகுதி வெளியிடப் பட்டது. அதற்குப் பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்தே 'சிநேகமுத்ரா' வெளியிடப் பட்டது.அதில் தான் தமது துன்பத்தை ஒரு கலைப் படைப்பாக்கித் தர அவரால் முடிந்தது.

அதனை எழுதிய போது இளைஞராய் இருப்பினும் கனிந்து முதிர்ந்த நடையில் தம் நூலை அவர் படைத்தார். வருத்தம் தோய்ந்த, சிந்தனைகளில் மூழ்கிப் போகிற தன்மையை உடைய மனிதராகவே அவர் இருந்தார். கதாநாயகன், கதாநாயகி, கதாநாயகனின் நண்பன், அவனது மனைவி ஆகியோர்தாம் பாத்திரங்கள். நண்பர்களின் குழுவும், இந்து விதவை ஒருத்தியும் அவளது தந்தையும் துணைப் பாத்திரங்கள். மணவாழ்வின் இனிமையைக் கூறவந்த கோவர்தன்ராம் குடும்பம் மற்றும் சமூக வாழ்வின் பல தன்மைகளையும் விளக்கிச் செல்கிறார். கதாநாயகனும் கதாநாயகியும் உணர்ச்சிப் பிழம்புகளாய் உள்ளனர்.சமூகம் பற்றிய விழிப்புணர்வு உடையவர்களாக இருக்கின்றார்கள். நண்பனும் அவனது மனைவியும் அத்தகையோரே. முன்னிகழ்வாக, இந்து விதவையின் கதை தரப்பட்டுள்ளது. இது தாம்பத்திய

வாழ்வின் இன்பங்கள் உரைப்பதற்கு நல்ல பின்னணியாய் அமைந்து நூலுக்கு மெருகேற்றுகிறது. தீவிரமான காதலுடன் அகண்ட சமூகப் பிரச்சினைகளையும் இழைத்துத் தருகிறார் ஆசிரியர். தனி மனிதனின் வாழ்வில் சமூகக் கோட்பாடுகள் இடையறாது தலையிட்டு வந்த அந்தக் காலத்து வாழ்க்கையின் பின்னணியில் இதை நாம் காண வேண்டும். பெற்றோர்கள் ஒச்சும் அதிகாரத்தினாலும், குழந்தைப் பருவத் திருமணங்களினாலும் இந்து கூட்டுக் குடும்பங்கள் குழப்பங்களின் விளை நிலங்களாகவே திகழ்ந்தன. கோவர்தன்ராமுக்கோ, காதல்தான் மகிழ்ச்சியின் அடிப்படை. அங்கு துயர அனுபவங்கள் தவிர்க்க இயலாததாகவும் இருக்கலாம். ஆயினும் அதுவே இயற்கையோடும் சமூகத்துடன் மனிதனை இணையவைப்பதாகவும் இருக்கிறது. அவர் மேலும் ஒரு படிமேலே போய்க் கூறுகிறார்: 'ஆழ்ந்த காதலின் தன்மை சாவை யும்வென்று என்றும் வாழும்.' அதிர்ச்சியும், துன்பமும் விளைவித்த பேரிழப்புக்கு ஆளான துன்ப அனுபவமே இந்நூல் தோன்றக் காரணமாய் இருந்தது. ஆயினும் அக்காலத்துச் சமூக வழக்கங் களையும் கருத்தில் தொண்டு காதல் பற்றிய சித்தாந்தம் ஒன்றைப் படைப்பதில் ஆசிரியர் வெற்றியே கண்டுள்ளார். இந்நூலில் சமஸ்கிருதக் கவிஞர் பவபூதியின் தாக்கம் அதிகமாகவே உள்ளது எனலாம்.

'சிநேக முத்ரா'வின் கதாநாயகனும் கதாநாயகியும் வெளி நாட்டவராகக் காட்டப் பட்டுள்ளனர். ஏனெனில், அக்காலத்திய சமூகம், அத்தகைய பாத்திரப்படைப்பை உண்மைக்குப் புறம் பாகவே கருதும் நிலையில் இருந்தது. சமூக மேம்பாடு பற்றிய அவர்களது கொள்கையே அவர்களை மீண்டும் இந்தியாவுக்குக் கொண்டு வருகிறது.

சமூகம், வீடு, மதம் பற்றிய கருத்துகள் கதைப் போக்குடன் ஒன்றாமல் தனித்து நிற்பது 'சிநேகமுத்ரா'வின் குறை என்று கருதப் படுகிறது. இயல்பாக, கதைப்போக்கோடு கருத்துக்களை இணைக்கும் முயற்சியில் ஆசிரியர் சிறக்கவில்லை. சாதனையிலும் அமைப்பிலும் சீர்ப்பட வேண்டியவை அதிகமாகவே உள்ளன.

சொந்த அநுபவத்தைப்} பொதுமைப் படுத்துவதற்காக ஆசிரியர் பெருமுயற்சி மேற்கொண்டுள்ளார். இதன் பலனாய் கூறப்பட்டுள்ள உணர்வுகளும், துயரங்களும், வலுவற்றுப் போகின்றன. உண்மையான உணர்வுகள் இந்நூலில் மிகக் குறைவாகவே வெளிப்படுத்தப்படுகின்றன என உரைக்கிறார்

உமாசங்கர் ஜோஷி, ''இறந்து போன மனைவி மீண்டும் உயிர் பெற்று வந்து இந்நூலைப் படிக்கும் துணிவும் கொண்டால் 'என்னை இழந்தது குறித்து நீங்கள் அதிகம் துன்புறவில்லை என்றே படுகிறது என்று தான் சொல்ல வேண்டிருக்கும்,'' என்கிறார் அவர்.

நூலுடன் தொடர்பு இல்லாத 'சதி' பற்றிய கோவர்தன் ராமின் கருத்துக்களே மிக அற்புதமான அழகுடன் நேர்த்தியாக எடுத்துரைக்கப் பட்டிருத்தல் வியப்புக்குரியதாக உள்ளது. 'சிநேசமுத்ரா' ஒரு கலைப்படைப்பு என்று கொள்ளத்தக்கதல்ல தான். ஆயினும், கவனத்தை ஈர்க்கும் நல்ல பகுதிகள் ஆசிரியரின் கவிதா வன்மைக்குச் சான்றுகளாய் உள்ளன. இல்லாள் இறந்த பின் மலை உச்சியில் நின்று மேகக் கூட்டத்தை காண்கிற கதாநாயகனைக் காட்டும் காட்சியில் உரைக்கப்படும் இயற்கை அழகு மிக நேர்த்தியானது. கவிதைகளின் மேன்மை 'சிநேகமுத்ரா'வுக்குப் பெருமை சேர்ப்பதாகிறது. 'ஸ்ரத்தூள் விக்ரிதிதா' 'ஷிகாரினி', 'மந்தக்ரந்தா,' 'ஸ்ரக்தாரா,' 'மாலினி', 'திந்தி,' 'ஹரிகீதா', 'சோபை', 'தோடக', 'லாவணி', 'காடவ்,' 'தோஹாரா' என்று பல்வேறு யாப்புகள் பயன்பட்டிருப்பினும் யாப்புத் தேர்வு சிறப்பாக அமையவில்லை என்பது வருத்தம் தருகிறது. விரஜ் மொழிப் பஜனைகளையும், கர்நாடக இந்திய ராகங்களையும் கூடப் பயன்படுத்தியிருக்கிறார் அவர் 'கடவ்' என்னும் யாப்பை மிகச் சிறப்பாகப் பயன்படுத்தியுள்ளார்.

'சிநேகமுத்ரா'வில் எடுத்தாளப்பட்டுள்ள சொற்தேர்வுகளும் அந்நூலின் தன்மைக்குக் காரணமாகி விடுகிறது வழக்கில் இல்லாத சமஸ்கிருத வார்த்தைகளை ஆசிரியர் விரும்பிப் பயன்படுத்தி உள்ளார். பழக்கமில்லாத பொருள்தரும் அத்தகைய வார்த்தைகள் அடிக்கடி பயன் படுத்தப்பட்டுள்ளன. எனினும் பேச்சு வழக்கான மொழியுடன் அவற்றை நயம்பட இணைத்து, கூறவந்த சம்பவங்களை விவரிக்கும் பாங்கு அவருக்கு கை வந்திருந்தது.

'சிநேகமுத்ரா', ஒரு கையறு நிலைக் கவிதையாகத் கொள்ளத்தக்கதா என விமரிசகர்கள் ஆய்ந்துள்ளனர். 'விரகபஞ்சயதனா' (ஐந்து கையறுநிலைக் கவிதைகள்) என்று எழுதினார் நானாலால். மஸ்தகவி திருபுவன் பிரேம்சங்கரின் 'கலாபிநோ விரஹ' என்ற நூலுக்கு முன்னுரையே நானாலாலின் கட்டுரை. இதிலே அவர் மூன்று குஜராத்தி கவிதைகளை (தல்பத்

ராமின் 'போர்பஸ் விரஹ' ,தளபத்ராமின் 'போர்ப்ஸ் விரகா' பிரேம் சங்கரின் 'கலாபிநோ விரகா', 'சிநேகமுத்ரா' என்றும் மூன்று) உலக இலக்கியங்களான ஷெல்லியின் 'அதோனிஸ்', டென்னிசனின் 'நினைவஞ்சலி' ஆகியவற்றுடன் ஒப்பிடுகிறார். இதைச் சரியென்று கொள்வதற்கில்லை. முதலாவது மட்டுமே சரமகவி இயற்று வதற்கான முயற்சி என்று கொள்ளப்படலாம். மற்றவை, சரம கவிக்குத் தேவையாகக் கருதப்படும் நேசத்துக்குரியவர் மறைவும், அது சார்ந்த துயர நினைவுகளும் கொண்டிருப்பினும் வழமை களிலிருந்து வழுவுகிறது. 'சிநேகமுத்ரா'வின் பாத்திரங்கள் சாவின் எல்லைக்குள் மறைகிறார்கள். மீண்டும் தோன்றுகிறார்கள். இறந்தவர்களுடன் உரையாடுகிறார்கள். இவை அனைத்தையும் எளிதாகச் செய்கிறார்கள். ஒரு சரமகவிதையின் உயிர்நாடியாக இயங்க வேண்டிய இழப்பு உணர்வு இதனால் பாதிக்கப்படுகிறது. ஆசிரியரும் சரமகவிதை ஆக்கச் சித்தம் கொண்டவராய்த் தெரிய வில்லை. 'நினைவஞ்சலி'யே ஆசிரியரின் மாதிரியாகத் தெரிகிறது சமூகப் பிரக்ஞை, கருத்துக்களைக் கூறுதல், இயற்கையில் ஈடுபாடு, ஆன்மீக வாழ்வில் நம்பிக்கை எனப் பலவற்றில் 'சிநேகமுத்ரா'வின் ஆசிரியர் டென்னிசனின் கருத்துக்களோடு ஒத்தவராகவே காணப்படுகிறார்.

'சிநேகமுத்ரா'வையும், 'சரஸ்வதிசந்திர'வில் ஆங்காங்கே காணப்படும் கவிதைகளையும் தவிர கோவர்தன்ராம் வேறு கவிதைகளையும் இயற்றியுள்ளார். 1904-ல் 'கவிபோக்ய கவிதா' 'அத்யாத்மிக் கவி அநே தெனி கவிதா', 'அநுபம் திமிர்', 'அனுபம் தேஜ்' ஆகியவை வெளிவந்தன. இவற்றில் எதுவுமே கவனத்தில் நிலைப்பதாய் இல்லை. 1905-ல் வெளியிடப்பட்ட 'பிரணவ புருஷா'வும் 'குருஷேத்ராவு'ம் கூட அப்படியே அமைந்தன. 'சன்சார பிரதிபிம்பா' என்பது வெறுமனே ஆசிரியரின் சுற்றுப்புறச் சூழலைத் தருவதோடு நின்று விடுகிறது. ரசசுந்தரியும் தத்துவானந்த ஸ்வாமியும் துறவிகளின் வாழ்க்கைச் சித்திரிப்புகள் மறைநிலை இறை அனுபவம் ஒன்றின் மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறது. தத்வானந்தா. 'முழுமையை உணர்ந்ததி னால் தோன்றிய மகிழ்ச்சி என்பதே' தத்வானந்தா நூலின் பொருளாகும். அத்தகைய அனுபவத்துக்கு ஆளானவர், அதன் பின் 'ரசசுந்தரி' என்ற பெண்ணுக்கு அறிமுகமாகிறார். 'ரச சுந்தரி' என்றால் 'இன்பங்களின் அரசி' என்று பொருள். அந்த இருவருக்கும் நடைபெறும் உரையாடலின் வடிவமாகவே அமைந்துள்ளது கவிதை. இயற்கை வர்ணனை, திறமையும் கவித் திறனும் கொண்ட உரையாடல், ஒலிநயம் ஆகியவை குறிப்பிடத்

தக்கவையாக இருப்பினும் கவிதைத்தன்மை இடைத்தரமான தாகவே உள்ளது.

கோவர்தன்ராம் நாடகங்களும் எழுத முயற்சி செய்துள்ளார். ஆனால், குறிப்பிடத்தக்க எதனையும் படைக்கவில்லை. ஆங்கிலத்தில் **'சுனி சதி'**யை எழுதியுள்ளார். இது ஒரு நல்ல பெண்மணியின் வாழ்வு பற்றிய அறிவுரை நூலாகும்.

# 6. 'லீலாவதி ஜீவன்கலா'

கோவர்தன்ராமின் மூத்தமகள் லீலாவதி 1902-ம் ஆண்டு ஜனவரி மாதம் எட்டாம் நாள் இயற்கை எய்தினாள். அடுத்த ஆண்டில் அவளது நினைவாக 'ஜீவன்கலா' என்னும் நூலை கோவர்தன்ராம் எழுதினார். 1905-ல் அது வெளியிடப்பட்டது. இரண்டாவது பதிப்பு 1909-ல் வெளியிடப்பட்டது. மூன்றாவது பதிப்பு 1923-ல் வெளியிடப்பட்டது. 'லீலாவதி ஜீவன்கலா' வாழ்க்கை வரலாற்று நூலாகும். 'சுனி சதி', 'மாதவ்ராம்ஸ் மரிகா'. முன்குறிப்பு ஒன்று. 'சுவர்கர்ஸ்த சாக்ஷர் நவல்ராம் லட்சுமிராம் நன் ஜீவன்விருத்தாந்தா', 'கவி தயாராம்நோ அக்ஷர்தேஹா' ஆகிய ஆசிரியரின் முயற்சிகளான பிற வாழ்க்கை வரலாற்று நூல்களில் வரிசையில் வைக்கப்பட வேண்டியதாகும். கோவர்தன்ராமின் எழுத்தாண்மையும், கலைத் திறனும் 'மாதவ் ராம் ஸ்மரிக்கா'விலும், நவல்ராமின் வாழ்க்கையின் இறுதி யாண்டுகளைக் கூறும் பகுதியிலும் வெளிப்படுகின்றன. நுதல் பொருளாவாரின் அகவாழ்வு பற்றியே கோவர்தன்ராம் அதிகம் சிந்திப்பவராகிறார். எடுத்துக்காட்டாக தயாராமின் வரலாற்றில் வாழ்க்கை சம்பவங்களை முற்றாகத் தவிர்த்திருக்கிறார் ஆசிரியர். தம்முடைய மக்களின் வாழ்க்கை வரலாறான 'லீலாவதி ஜீவன் கலா'வில் அவரது பண்புகள், நற்குணங்கள், மனப்பாங்கு ஆகிய வற்றை பற்றி மட்டுமே கூறிச் செல்கிறார். வாழ்க்கையின் நிகழ்வுகள் கூறப்படாததால் அதனை வாழ்க்கை வரலாறு என்று குறிப்பிடவும் முடியவில்லை. தம் மகளுடன் நிகழ்த்துகிற உரை யாடலின் வடிவமாகவே நூல் அமைந்துள்ளது—அல்ல, அன்பும் பொறுப்பும் மிக்க எந்தத் தந்தையும் அன்புக்குரிய ஒரு மகளுடன் நிகழ்த்தக் கூடிய உரையாடலே அது.

தம் மகளைச் சித்தரிப்பதே இந்நூலின் நோக்கம் அல்ல என்பதே என் கருத்து. இவ்விஷயத்தில் நான் பல்வந்த் ராய் தாகோரின் கருத்திலிருந்து வேறுபடுகிறேன். சொல்லப்

போனால், நூலின் கருப்பொருளும் பாத்திரமும் கூட ஆசிரியரின் மகள் அல்ல. அவரது உருவத் தோற்றம் பற்றி எவ்விதக் குறிப்புகளும் தரப்படவே இல்லை. பாத்திர வார்ப்பு இலட்சிய வடிவமாக உள்ளது. எல்லா நற்பண்புகளும் வாய்க்கப்பட்ட ஹிந்துப் பெண்ணின் வடிவமாக அமைகிறது. எந்தச் சராசரி பெண்ணும் எய்தக் கூடிய லட்சிய நிலையை, உண்மை நிலையி லிருந்து புறம் போகாத தன்மையை, சித்தரிக்கிற முயற்சியாகவே இருக்கிறது இந்நூல்.

ஆகவே, 'லீலாவதி ஜீவன்கலா'வில் கலா ரீதியான பதிவு நமக்குக் கிடைக்கிறது. ஆனால், அப்பதிவு மையக் கருத்தோட்டத் துடன் இணைக்கப்படாததாக இருக்கிறது. முதலாவதாக, பத்து வயது சிறுமியொருத்தி, மனிதர்கள் திருமணமே புரிந்து கொள்ளாமல் இருப்பது சரியானதுதானா என வினவுகிறாள். அந்த நாட்களில், இந்தியாவில், பெண்களைப் பொறுத்த அளவில் திருமணம் ஒரு கட்டாயம். 'சாவித்ரிசரிதா நாடக்' என்ற நூலில் பெற்றோரின் அறிவுரைக் கடிதங்களைப் பத்திரப்படுத்தி வைக்கும் மகளின் நினைவு. இரண்டாவது இன்னலுக்கு ஆளாகி விட்ட குடும்பத்தில் அவரது மகள் பால், நெய் ஆகியவற்றை உட்கொள் வதைக் குறைத்துவிட வேண்டும் என்று எடுக்கிற முடிவாகும். மஞ்சளைக் கூட சிக்கனமாகவே பயன்படுத்துவாள். அவள் தன் மாமியாரைக் குறை கூறும் அன்னையை எதிர்த்தலும், கணவனைப் பற்றி புறங்கூறுவோரை எதிர்த்தலும் (கணவனைப் பற்றி தவறாகப் பேசுபவர்களின் தலை துண்டிக்கப்பட வேண்டும்) எலும்புருக்கி நோய்க்கு ஆளான கணவனுக்குப் பணிவிடை புரிந்து தானும் அந்நோய்க்கு இரையாதலும், அன்னையை ஆற்றுவிப்பதும், தன் சகோதரிகளின் எதிர்காலம் குறித்து கவலை கொள்தலும், கடினமான மதநூலினை விளக்கும்படி தந்தையிடம் கேட்பதுமான பகுதிகள் சிறந்த எழுத்தோவியங்கள். பல்வந்தராய் தக்கோர் கூறுவது போல ஆசிரியர் தம் மகள்பால் கொண்டிருந்த அளப்பரிய அன்பின் காரணமாக, இந்நூலை எழுதும்போதும், நண்பர்களுக்கு படித்துக் காட்டும்போதும் பலமுறை கண்ணீர் பெருக்கி இருக்கிறார். நெருங்கிய நினைவு களின் இத்தகைய உண்மைச் சித்தரிப்புகளாலேயே இந்நூல் நெஞ்சை நெகிழ்த்துவதாக இருக்கிறது.

நூலின் நான்காம் பகுதி லீலாவதியின் கல்வியைப் பற்றி உரைக்கிறது. அவளது தந்தையே அதனையும் திட்டமிடுகிறார். அவளுக்கு ஆங்கிலப் பயிற்சி அவ்வளவாக இல்லை. அந்த நாளில்

குஜராத் மொழியில் ஆங்கிலத்தில் இருந்து மொழி பெயர்க்கப் பட்ட நூல்களும் அதிகமாக இல்லை. ஆகவே, இங்கிலாந்தைப் பற்றிய பயணநூல் ஒன்றினை மட்டுமே அந்த அன்பான தந்தையால் தம் மக்களுக்குத் தர முடிகிறது. அவள், குஜராத்தி செய்தித் தாளையும், நற்பண்புகள் வாய்ந்த பெண்களைப் பற்றி போதிக்கும் 'பாமினிபூஷன்' என்னும் பக்தி நூலையும் படிப்பவள். தம் மகளின் கல்வி பற்றிய ஆசிரியரின் சிந்தனைகளே பெண் கல்வி சார்ந்த பிரச்சினைகள் பற்றி அவரை எண்ண வைக்கிறது இறுதி யாக, ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருத இலக்கியங்களின் பிழிவை அவர் அவளுக்குத் தருகிறார்.

ஐந்தாவது அத்தியாயத்தில் தந்தை-மகள் உறவு பற்றி கூறப் பட்டுள்ளது. அவளுடைய தந்தையை கடவுள் உண்டு என்பதைக் கண்டறிய முடியாதெனக் கருதும் கொள்கையுடைய லோகாயத வாதி என்று கூறும் விமரிசனத்தை பொறுத்துக் கொள்ளாதவளாய் தம் மகள் இருந்ததை அவர் நினைவு கூர்கிறார். அலங்காரங் களிலும், அணிகலன்களிலும் அவர் எப்போதும் அதிக நாட்டம் செலுத்தியதில்லை. மற்றவர்கள் அழகாக உடுத்திக் கொள்வதைக் காண்பதிலேயே அவர் ஆனந்தம் கொண்டார். அவரது மேன்மையான பண்பை அவரது கணவரும் பெட்லட்டில் இருந்த பிற உறவினர்களும் மிகவும் போற்றினர். அவருடைய ஞானமும் பொறுமையும், அன்பும், கடவுள் நம்பிக்கையும், ஒழுக்கம் மற்றும் மதத்தின் பாற்பட்ட தீவிர பிடிப்புமே சிறந்த பண்புகளாகத் திகழ்ந்தன. அவைகளைப் பற்றி கோவர்தன்ராம் விரிவாக எழுதி யுள்ளார். இத்தன்மைகளில் பெரும்பாலானவை, நன்கு திட்டமிடப்பட்ட கல்விப் பயிற்சியின் விளைவேயாயினும் உடன் பிறந்த குணமும் காரணமாகும் என்பது கோவர்தன்ராமின் கருத்து இல்லையேல் கல்வியினால் மட்டும் நற்குணங்கள் ஏற்பட்டு விடாது. ''என்னிடமும், அவளது தாயாரிடமும் உள்ள சிறந்த குணங்களை ஸ்வீகரித்துக் கொண்டதோடன்றி, தன் அறிவி னாலும் ஒழுக்கத்தினாலும் மேலும் பல நல்ல பண்புகளையும் அவள் அடைந்திருக்கிறாள். பாரம்பரியத்தை விட அவள் தன் ஆன்மாவுக்கே கடன் பட்டவளாகிறாள்'' என்று அவர் கிருஷ்ணலால் ஜவேரிக்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

லீலாவதி வாழ்வாங்கு வாழ்ந்தவர் என்பதில் ஐயமில்லை. குறிப்பிடத்தக்க உறுதியோடு அவர் வாழ்நாள் முழுவதும் வறுமையை எதிர்த்துப் போராடியவர். ஒரு வகையில் அவர்

வறுமைக்காக தம்மையே தியாகம் செய்து கொண்டவர். அவரை ''நற்செயல்களின் வடிவம்'' எனலாம். அவருக்கு அஞ்சலி செலுத்தக் கூட தனக்குத் தகுதியில்லை என மனந்திறந்து கூறுகிறார் கோவர்தன்ராம். அவரது வாழ்வும், பிறப்பும், இறப்பும் வேறு எவருடனும் பகிர்ந்து கொள்ள முடியாத, ஊமையின் கனவே என்று அவர் கருதினார். எனினும், 'லீலாவதியின் வாழ்க்கைக் கலை' எனப்படும் இந்நூல் அவரை சிறந்த முறையில் சித்தரித்துக் காட்டுகிறது.

# 7. விமர்சன நூல்கள்

ஒரு படைப்பிலக்கிய எழுத்தாளரான கோவர்தன்ராம் வாழ்வின் விமர்சகராகிறார். ஒரு விமரிசகராக, வாழ்வின் அனுபவங்களை மதிப்பீடு செய்பவராகத் தம்மை வளர்த்துக் கொள்கிறார். வாழ்க்கையோட்டதை நுணுகி ஆய்தலே ஒரு கலைஞர் என்ற முறையில் அவருடைய பேரார்வமாக உள்ளது. ஒரு விமரிசகராக, அவர் இலக்கியத்தை வாழ்வோடு பொருத்திப் பார்க்கிறார். இத்தன்மையே அவரைப் பிற விமர்சகர்களில் இருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. சமூகம், கல்வி, மதம் ஆகியவைகளையும் கருத்தில் கொள்கிறார். தான் ஆராய்வதைப் பற்றி மட்டும் தெளிவை ஏற்படுத்துவதோடன்றி வாழ்க்கை பற்றிய தெளிவும் பெற வேண்டும் என்பதே அவரது எண்ணம். ''சிறந்த எண்ணங்களை நிலைநாட்ட, உண்மையான, புதிதான எண்ணங்களை தோற்றுவித்தல்'' என்று விமரிசனத்தைப் பற்றி ஆர்னால்ட் என்பவர் கூறிய கருத்திற்கேற்ப வாழ்ந்தவர் கோவர்தன்ராம்.

தன்னுடைய லட்சிய எழுத்தாளனை கோவர்தன்ராம் சாக்ஷரா-ஜீவனில் படைத்துக் காட்டியிருக்கிறார். வாழ்வின் நீரோட்டங்களை ஒரு சிந்தனையாளன், ஒரு தத்துவஞானி, ஒரு எழுத்தாளன் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். வாழ்வெனும் நதியின் கரையில் நின்று கொண்டு அதன் உயர்வுகளையும் தாழ்வுகளையும் காண வேண்டும். அத்தகைய சிந்தனையாளர் களின் வாழ்க்கையைப் பற்றியும் அவன் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறாக ஒரு விமர்சகர் 'லக்ஷணா-த்ரஷ்டா' வாக, லட்சிய நோக்குள்ளவராக உருவாக விடுகிறான். குணாதிசயங்களையும் வாழ்க்கைப்போக்குகளையும் அறிந்து ஞானியாகிறான். எழுத்தாளர்களின்-எண்ணற்ற பல்வேறுவித மான ஆர்வங்களையும் விமர்சகன் தொகுத்தளிக்கிறான். அவனுடைய முயற்சி முழுவதும் எழுத்தாளனின் முழு வாழ்க்கையைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் சேகரித்து

அலசி, கவிஞனின் வரலாற்றைத் தெளிவாக வழங்குவதே. இப்படி அறியப்படுவதே கவிஞன், புலவன், அறிஞர் வாழ்க்கைகள். கோவர்தன்ராமின் கூர்த்த அறிவுக்கும் விரிவான முறையில் எல்லாவற்றையும் ஆராயும் தன்மைக்கும் ஒரு எடுத்துக்காட்டே இந்நூல்.

நவல்ராமின் வாழ்க்கை வரலாற்று நூலுக்குக் கோவர்தன் ராம் எழுதியுள்ள முன்னுரையில் அவரது லட்சிய விமர்சகனைப் பற்றிக் காணலாம். விமரிசனம் என்பது குற்றம் கூறுவது மட்டுமாக இருந்தால் அது படைப்பிலக்கியத்தை விட எளியதாகி விடும். விமரிசகன் என்பவன் சிறந்தவற்றையும் தேடிப்பிடித்து மதிப்பீடு செய்ய வேண்டும் என்கிறார் கோவர்தன்ராம். கெட்டவையும், தவறுகளும் புறக்கணிக்கப்பட வேண்டியவை, 'மகிழ்ச்சி-விருந்தை' ஏற்பாடு செய்வதே விமரிசகனின் குறிக்கோளாகும் என்கிறார் அவர். இது சாத்தியமாவதற்கு விமரிசகனுக்குச் சில தகுதிகள் வேண்டும். படைப்பின் வழிமுறை களைப் பற்றிய நுட்பமான ஞானம் இருக்க வேண்டும்; அழகியல் நுகர்வு தரும் மகிழ்ச்சி பற்றித் தெரிந்திருக்க வேண்டும்; அப்போது தான் உண்மையாகவே, மாபெரும் அளவில் போற்றத்தக்கதான, உண்மையாகவே மகிழ்ச்சி தரக் கூடியதான ''மகிழ்ச்சி விருந்தை'' அவன் வழங்க முடியும். அந்த ஆனந்தத்தை மற்றவர்களுடன் பங்கு பெறமுடியும்.

தமது காலத்தின் முதல் நாடகங்களைப் பற்றி 1896-97-ல் ''அகல்நஅப்நா ஆதிநாடக்'' என்ற நூலை எழுதினார். எழுத்தாளனுக்குள் இருக்கும் சிறப்பை வெளியே கொண்டு வருவதே விமர்சகனின் பணி என்கிற அவரது கருத்தையே இந்நூலும் வலியுறுத்துகிறது. குற்றம் காண்பதாயினும் உண்மையை அறியும் வேட்கையுடனே அதனைக் காண வேண்டும். ஒரு நூல் முற்றிலும் தீயதாக இருப்பின் அதனை விட்டு விடுவதே சிறந்தது.

கோவர்தன்ராம் சொல்வதைப் போன்ற லட்சிய விமரிசகராக இருப்பது நடைமுறையில் மிகக் கடினமானது. அவரே சொல்லி யிருப்பது போல தனி மனித விருப்பு வெறுப்புகள் நேர்மையான விமர்சனத்துக்குள்ளும் நுழைந்துவிடுகின்றன. விமரிசகன் உள்ளுணர்வு உடையவனாக இருந்தால் மட்டும் போதாது. எழுத்தாளனின் மேல் பரிவு உடையவனாக இருந்தால் மட்டும் போதாது. அவர் எழுதிய நூலின் மேலும் பரிவுடையவனாக இருக்க வேண்டும். அதுதான் நூலின் சிறப்புகளைக் கண்டுபிடிக்க

உதவும். இலக்கியத்தை ஊடுருவிப் பார்க்கும் தன்மையும், இலக்கிய நயங்களை உணர்கிற பாங்குமே ஒரு விமரிசகனை வேறுபடுத்திக் காட்டும்.

நூலின் உள்ளடக்கத்தைச் சுருக்கி உரைப்பதும், அது பற்றிய விமரிசனங்களை கணக்கில் எடுத்துக்கொள்வதும் ஒரு விமரிசகனின் கடமையாகிறது என்கிறார் கோவர்தன்ராம். விமரிசன அநுபவமே அவனது விமரிசனப் பார்வையை வடிவமைக்கிறது,

புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கிற நவல்ராமின் பண்பை அதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அவர் காட்டுகிறார். அவரே இளமையில் ஏமாற்றத்துக்கு ஆளானவர்தான். இடமாற்றமும், வயது முதிர்ச்சியும் கூட விமரிசனத்தைப் பாதிக்கும் என்கிறார் கோவர்தன்ராம். நவல்ராம், அஹமதாபாத்தில் இருந்து சூரத்துக்குப் போன பிறகு நர்மத் எனும் கவிஞரைப் பற்றிய தம்முடைய கருத்தை மாற்றிக்கொண்டார். பிரேமானந்தைப் பெருங்கவிஞர் எனக் கருதலானார். 1878-ல் அவர் ராஜ்கோட்டுக்கு வந்த பின்னால் தனது கருத்தை மாற்றிக்கொண்டு நர்மதை, ''மக்களின் மனிதர்'' என்று அழைத்தார். 1887-ல் நவல்ராம் நர்மதைப் பற்றி, 'காலத்தின் மனிதர்' என்று எழுதினார் என்பதைக் குறிப்பிடுகிறார் கோவர்தன்ராம். காலத்தின் உணர்வினையே நர்மதின் பாடல்கள் எதிரொலிக்கின்றன என்று கருதினார். நர்மதின் சிறப்புகளை எடுத்துக் கூறுகிற இயல்பு அவருக்கு வந்துவிட்ட போதிலும் அதனை அவர் மிகைப்படுத்தாமலும், முதிர்ச்சியுடனும் செய்தார். மிகையான ஆர்வத்தைத் தள்ளிவிட்டுப் பார்த்தால் நவல்ராமை, நர்மதின் உண்மையான விமர்சகர் என்று சொல்லலாம். விமர்சனத்தைப் பற்றிய கோவர்தன்ராமின் இந்த விமர்சனம், அவருடைய பரந்த பார்வைக்கும், கல்விக்கும், முதிர்ச்சிக்கும், ஊடுருவும் நோக்குக்கும் சான்றாக உள்ளன.

ஏற்கனவே குறிப்பிட்டுள்ளபடி, கோவர்தன்ராம் இலக்கியத்தை வாழ்வு, சமுதாயம், பண்பாடு ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தியே காண முனைந்தார். 'கவி தயாராம்நோ அக்ஷர்தேஹா', 'குஜராத்தியின் கவிஞர்களும் சமூகம் மற்றும் ஒழுக்கங்களின் மீதான அவர்களின் தாக்கமும்', 'குஜரத்னா பிராச்சின் சாகித்யானா இதிஹாஸ்னு திக்தர்ஷன்' ஆகிய நூல்களில் இத்தன்மை குறிப்பாகக் காணக் கிடக்கிறது. கோவர்தன்ராமின் விமரிசனப் பார்வை இவருக்குப் பின்னால் வரும்

விமரிசகர்களின் ஆராய்ச்சிக்குப் போதுமான பொருளை அளிக்கிறது. இலக்கியத்தின் வரலாறோ, பண்பாட்டின் வரலாறோ அல்லது பொதுவான வரலாறோ கோவர்தன்ராமைப் பொறுத்த அளவில் எண்ணத்தின் வரலாறே ஆகும். அவருக்குப் பின்னால் வந்த விமர்சகர்கள் அதே கருத்தினை உடையவர்களாக இருக்கவில்லை. ஒரு விமர்சகர் என்ற விதத்தில் கோவர்தன்ராம் சிறப்பான பணிபுரிந்துள்ளது அவர் நரசிங், மீரா, அகோ, பிரேமானந்த் ஷாமல், தயாராம் ஆகியோரை மதிப்பீடு செய்தபோதுதான். அவற்றினுள்ளும் மிகச் சிறந்தது ஷாமலைப் பற்றிய அவருடைய மதிப்பீடாகும்.

கோவர்தன்ராம் குறிப்பிட்டுள்ளபடி தயாராம் வேறுபட்ட மரபுகளையும், மதப் பிரிவுகளையும் பின்பற்றிய கவிஞர்களும் பண்டிதர்களும் வாழ்ந்த காலத்தைச் சார்ந்தவர். எனவே தயாராமின் எண்ணங்கள் சிதறிப் போவது இயல்பே. வைணவக் கவிஞரான தயாராம், வேதாந்தத்தையும், யோக மார்க்கத்தையும் சத்தா பந்தாவையும் பின்பற்றும் மதத் தலைவர்களுக்கும் கவிஞர்களுக்கும் இடையே அவர்களுடைய உரிமை கோரும் குரல்களுக்கு இடையே தனித்து நிற்கவே அரும்பாடு பட்டார் தயாராமிடம் மதிக்கப்பட வேண்டியது என்னவெனில், அவருடைய நேர்மை, அன்பு கலந்த பக்தி, அந்த பக்திஉணர்வின் வெளிப்பாடாக விளங்கும் நூல்கள். இவைகளே ஒன்றுடன் ஒன்று மோதும் அந்தக் காலத்தின் இனமோதல்களுக்கு அப்பாற்பட்டு நிற்கின்றன. தயாராமின் படைப்புகளில் கவனம் செலுத்திய கோவர்தன்ராமின் ஊடுருவு-நோக்குதிறன் பாராட்டுதலுக்கு உரியதாகிறது.

வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் கூறும் 'தயாராம் நோ அக்ஷர் தேஹா' என்ற நூலில் கோவர்தன் ராம் தயாராமின் படைப்புகளை மதிப்பீடு செய்தற்குரிய வாய்ப்பைக் கண்டு அவற்றில் கருத்தைச் செலுத்தியுள்ளார். நரசிங்க ராவின் குஸும் மாலா என்ற நூலில் தம்முடைய சொந்தப் புத்தகத்தில் அவர் எழுதி வைத்துள்ள குறிப்புகளும் கோவர்தன் ராமின் அறிவாண்மைக்கும் கூர்த்த மதிக்கும் சான்றாய் உள்ளன. தன்னுடைய 'சரஸ்வதி சந்திரன்' நாவலில் நரசிங்கராவின் 'சண்டார்' என்ற கவிதையில் இருந்து சில வரிகளை அவர் மேற்கோளாகக் குறித்துள்ளார். கவிதை முழுவதிலும் விளையாட்டுத்தனமான பொருள்களைத் தரும் குறிப்புகளை அவர் காண்கிறார். ஒவ்வொரு படைப்பிலும் சிறந்ததைக் காணவேண்டும் என்ற அவருடைய கூற்றை அவர் எப்படிக் கடைப்பிடித்தார் என்பதையும் அதற்காக எவ்வளவு ஆழமாக அவர் அந்நூலுக்குள் மூழ்க வேண்டியிருந்தது என்பதை

யும் அந்தக் குறிப்புகள் காட்டுகின்றன. அத்தகைய கவிதையைப் பற்றி அவர் விரிவான ஆய்வுரை எதனையும் எழுதவில்லை என்பது ஒரு குறையே. அவ்வாறு அவர் செய்திருப்பின் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பேயே குஜராத் மொழியில் விமர்சனக் கலை தோன்றியிருக்கும்.

பழைய விமரிசகர்களுக்கும் புதிய விமரிசகர்களுக்கும் இடையே ஏற்பட்டுவிட்ட இடைவெளி குறித்துக் கோவர்தன்ராம் வருந்தினார். ''ஒரு மேகத்துக்கு'' என்ற ஷெல்லியின் கவிதையைத் தழுவி நரசிங்கராவ் எழுதிய கவிதையைப் பாராட்ட புதிய விமரிசகர்கள் எவரும் முன்வரவில்லை என்கிறார் அவர். 'சுவர்க்க இழப்பு' என்ற காவியத்தின் பதினோரு ஆயிரம் வரிகளையும் நினைவில் இருத்திக்கொண்டிருந்த மெக்காலேயை உதாரணம் காட்டி, குஜராத்தின் இலக்கியங்களை எழுத்தாளர்கள் அனைவரும் நன்கு கற்று இவ்வாறே மனப்பாடமாக அறிந்திருக்க வேண்டும் என்றும் அவர் விரும்பினார். அத்தகைய ஆழ்ந்த பயிற்சி மட்டுமே பழைமைக்கும் புதுமைக்கும் பாலம் இட முடியும் என்று அவர் எண்ணினார். 1905-ல் குஜராத்தி சாகித்திய பரிஷத்தில் தலைமை உரை ஆற்றியபோது அவர் ஷெல்லியையும், வோர்ட்ஸ்வொர்த்தையும் சில குஜராத்தி எழுத்தாளர்கள் மட்டும் உணர்ந்து இன்புற்று பயனடைதல் போதாது; அவை அனைத்தும் குஜராத்தி மொழியில் மொழி பெயர்க்கப்பட வேண்டும் என்று உரைத்தார். அதற்கான மொழியை நரசிங்க மேத்தாவிடமிருந்தும் அகோவிடமிருந்தும் எடுத்தாளலாம் என்றார். கட்டற்ற கற்பனைப் புனைவியலாளர்களான ஷெல்லி, வோர்ட்ஸ்வொர்த் போன்ற ஆங்கிலேயக் கவிஞர்களின் படைப்புக்களை ஆர்வத்துடன் பயிலும் அக்காலக் குஜராத்தின் இலக்கிய ரசனையை பண்டைய குஜராத்தி இலக்கியங்களுடன் இணைக்க அவர் மேற்கொண்ட முயற்சியும் கோவர்தன்ராமின் பரந்த பார்வைக்கு இன்னுமொரு சான்றாகிறது. அதே சொற்பொழிவில் அவர் கூறிய மற்றொரு கருத்து: புதிய முயற்சிகளை மேற்கொள்ளும் ஆர்வம் காட்டும் அதே சமயத்திலே பண்டைய மரபினை போற்றிப் பேணுவதும் தேவையே.

தனது முன்னோடிகளையும் சமகாலத்தவரையும் கோவர்தன்ராம் விமரிசித்த பாங்கில் இருந்து அவரது தூய ரசனை, நடுநிலை உணர்வு, ஒவ்வொரு படைப்பிலும் இருந்து மெய்யான நயம் மிக்க பகுதிகளை அடையாளம் காணும் திறன் இலக்கியங்களின் மீதும், தெளிவான வெளிப்பாட்டின் மீதும் அவருக்கிருந்த பற்று ஆகியவை தெரிய வருகின்றன. தளபத்ராம், நர்மத்

ஆகியோரின் கவிதைகளை அவர் சீர்தூக்கிப் பார்க்கும் போது இவை வெளிப்படுகின்றன. நர்மதின் கவிதைகளில் உள்ள வேகத்தையும் தீவிரத்தையும் அவர் அடையாளம் காண்கிறார். ஆனால், அது கவிஞரின் திடமான பற்றுறுதிகளில் இருந்தே வெளிப்படுகிறதே அல்லாமல் கலாபூர்வமான உணர்வில் இருந்து அல்ல என்பதையும் கண்டு கொள்கிறார். நர்மதின் கவிதைகளில் அவர் ஆரவாரச் சொல்லாக்கத்தையும் கனவுருப் புனைவுகளையும் காண்கிறார். அதனுடைய வெற்றி முழுவதும் அந்நூலில் சமகாலத் தன்மையினால் உண்டானதே ஆகும். நர்மத், பின்னாளில் எழுதிய கவிதைகள் சமுதாயத்துக்குத் தேவையற்றவை என்று புறந்தள்ளுகிறார் கோவர்தன்ராம். தளபத்ராமின் கவிதைகளில் நடையின் தெளிவான போக்கினையும் வெளிப்பாட்டையும் அவர் குறிப்பிடத்தக்கதாகக் காண்கிறார். கற்பனா வளமும் எதிர்பாரா திருப்பங்களும்தான் தளபத்ராமின் கவிதைகள் வெற்றி பெற்றதற்குக் காரணம் என்று கருதுகிறார் அவர். அதனாலேயே அதில் சில குறைகளும் உள்ளன. வாசகர்களின் ரசனையில் அத்தகைய திடீர் திருப்பங்களை எதிர்பார்க்கிற குணம் வளர்ந்து விட்டது. அத்தகைய எதிர்பார்ப்புக்களை நீண்ட காலத்துக்கு நிறைவு செய்ய முடியாது.

நவல்ராம் கவிதைகள் எழுதியிருந்தால் புகழ் பெற்றிருப்பார் என்று கோவர்தன்ராம் கருதினார். படைப்பிலக்கியம் விமரிசனத்திலிருந்து வேறுபட்டது என்பதை நிறுவ நர்மதையும் நவல்ராமையும் எடுத்துக்காட்டாக்கியுள்ளார். எல்லோராலுமே கவிஞராயும் விமர்சகராவும் ஒருசேர விளங்க முடியாது.

ஆங்கில நாடகங்களையும் சமஸ்கிருத நாடகங்களையும் எண்ணத்தில் கொண்டு குஜராத்தி நாடகங்களை சீர்தூக்கிப் பார்வையிட்டார் அவர். ரன்ச்சோட் பாய் எழுதிய நாடகங்களுக்கு நாடக வடிவத்தினை விடவும் ஊக்கம் தரும் தூண்டுதலாக இருந்தது அரங்கமே என எண்ணினார். நோக்கங்களையும் விமரிசகர்களையும் ஒருசேரத் திருப்திப் படுத்தும் ஒரே ஒரு நாடகம் கூட இல்லையே என்று அவர் புலம்பினார்.

நகைச்சுவை பற்றி கோவர்தன்ராம் கூறிய கருத்துக்கள் நவல்ராமின் 'பட்னு போபல்னு' என்ற நூலை மையமாகக் கொண்டவையே. நகைச்சுவையை உயர்ந்த உணர்வுகளில் ஒன்றாக அவர் கருதவில்லை. அது சிறந்த கவிஞர்களிடம் அரிதாகக் காணப்படுகிற தன்மை என்றே அவர் எண்ணினார். நகைச்சுவையைச் சிறந்த முறையில் தருவதென்பது மிகவும்

கடினம் என்பது அவர் எண்ணம். கூரிய அறிவு, சமத்காரம், பரந்த அநுபவம் என்றதோர் கலவை அத்தகைய சித்திரிப்புக்குத் தேவைப்படும் என்று அவர் கருதினார். கீழ் மக்களைப் பாத்திரங்களாகப் படைப்பதையும் அவர் ஆதரித்தார். அத்தகைய பாத்திரங்களையும் அழகியல் தன்மையுடன் படைப்பதில் நவல்ராம் வெற்றியே கண்டுள்ளார் என்று கூறுகிறார். நவல்ராம் தன் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தி எட்டியிருக்கக் கூடிய சாதனையின் சிகரங்களை எட்டவில்லை என்பதுதான் அவர் குறை. 'பட்னு போபால்னு'வின் கதைக்களனாக தென் குஜராத்தைச் சேர்ந்த சூரத் மாவட்டத்தை நவல்ராம் தேர்ந்தெடுத்துக் கொண்டதே சரியானது என்று காண்கிறார் கோவர்தன்ராம். அவரைப் பொறுத்த அளவில் குஜராத்தின் வடபகுதியில் வாழும் மக்களுக்கு நகைச்சுவை உணர்வு குறைவு. மோலியரின் நாடகத்தை தழுவியது மிகவும் பொருத்தமானது, சரியானது என்றும் அவர் கூறுகிறார். கோல்ட்ஸ்மித்தின் 'ஹெர்மிட்'டையும் வாஷிங்டன் இர்விங்கின் 'ரிப்வான் விங்கிளையும்' தழுவி மஹிபத்ராம் எழுதிய நூல்களை விட மோலியரைத் தழுவிய படைப்பான 'பாட்னு போபால்னு' உயிரோட்டம் மிக்கது என்கிறார்.

குஜராத்தின் வடபகுதியில் வாழும் மக்கள் நகைச்சுவை உணர்வு குறைந்தவர்கள் என்று கோவர்தன்ராம் கூறியுள்ளது சரியன்று. பிரேமானந்தின் எழுத்துகளில் இருந்த நகைச்சுவையை காணத் தவறியதும் நல்ல இலக்கியங்களில் நகைச்சுவை அரிது என்று கூறியதும் அவ்வுணர்வு பற்றிய ரசனை, கோவர்தன் ராமுக்குக் குறைவு என்பதையே காட்டுகிறது. எடுத்துக்காட்டாக கூறவேண்டும் எனில் ஷேக்ஸ்பியரில் ஏராளமான நகைச்சுவை உண்டு. 'பட்னு போபால்னு' போன்ற தழுவல் நூலை அவர் மதிப்பீடு செய்தது திறமையுடைய புதியவர்களை வரவேற்பதில் அவருக்கு இருந்த விருப்பத்தைக் காட்டுகிறது. புதிய எழுத்தாளர்க்கு, மொழிபெயர்ப்பு ஒரு அவசியமான பயிற்சி என்றே அவர் எடுத்துக் கூறி வந்தார்.

கோவர்தன்ராம் குஜராத்தி மொழியின் எழுத்துக்களில் உள்ள சிக்கல்களைக் குறித்தும் மொழியின் பிற தன்மைகளை குறித்தும் எழுதியுள்ளார். இலக்கணத்தையும் மொழியின் வரலாற்றையும் அவர் வேறுபடுத்திப் பார்த்தார். மொழியை உறுதிப்படுத்துவதென்பது ஒரு கலை. அது மொழியியலுடன் தொடர்புடையதன்று என்று அவர் கருதினார். இது பற்றிய

அவரது கட்டுரைகள் முடிவுறாமல் இருக்கின்றன. ஆகவே அவற்றை மதிப்பிடுதல் இயலாது.

எழுத்தாளனின் வாழ்வும் பணியும் தனித்தனியாகப் பார்க்கப் பட வேண்டியவை என்று அவர் கருதினார். எழுத்தாளர் எதை எழுதினார் என்ன கருத்துக்களை வெளியிட்டார் என்பது மட்டுமே கருதற்குரியது. எடுத்துக்காட்டாக தயாராம் சிந்தித்ததும் எழுதியதும் அவர் வாழ்ந்த விதத்திலிருந்து வேறு பட்டேயிருந்தது.

நாவலின் வடிவம் பற்றிக் குறிப்பிடும் போது, வரலாறு போன்ற பிரமையைத் தோற்றுவிப்பதே நாவல் என்றார். ஒரு கவிதை என்பது கதையில் இருந்து வேறுபட்டது. கவிதை புதுமையான அம்சங்களின் திரட்சி-வசன கவிதை உருவாக்கு வதற்குரிய சாத்தியங்களை அவர் ஒப்புக் கொண்டார். ஆனால், செய்யுளையும் கவிதையையும் அவர் வேறுபடுத்திப் பார்த்தார். கதைகளும் செய்யுளும் அவரைப் பொறுத்த அளவில் வாய்மொழிக் கலைகள் ஆகும். இதனுடன் காட்சி அமைப்பு களைச் சேர்த்துவிட்டால் அதுவே நாடகமாக மாறும். கோவர்தன்ராம் கவிதைகளை இரு பிரிவுகளாகக் கண்டார்: அனைவரையும் கவர்வது, ஒருவகை; அறிவு ஜீவிகளான சிலர் மட்டும் ஏற்றுக் கொள்வது மற்றொரு வகை. நீதிநெறிகளை மக்க ளுக்குப் போதிப்பது எழுத்தாளனின் கடமை என்று அவர் கருதிய தால் கலை என்பது அனைவராலும் அநுபவிக்கத் தக்கதாக 'பிரபோதசந்த்ரோதயா' என்ற நாடகத்தை எடுத்துக் காட்டி, நாடகங்களில் அத்தகைய நீதி போதனைகள் தூக்கலாகத் தெரியாமல் கலைப் போர்வைக்குள் இருத்தல் வேண்டும் என்று கூறினார். அவையினரின் கவனத்தைத் தன்பால் நாடகாசிரியன் ஈர்க்க வேண்டும். அதற்காக, திடுக்கிட வைக்கும் காட்சிகள் சில இன்றியமையாததாகி விடுகிறது. அவற்றுள் கவிதை இல்லாமல் இருக்கலாம். ஒருவேளை இருப்பின் அவை அனைவருக்கும் புரியும்படியாக இருக்க வேண்டும். அவையினரின் ரசனைக்கு ஏற்றபடி நாடகம் தரவேண்டும் என்ற முயற்சி அக்கலையின் இழிவுக்கு காரணமாகி விடக் கூடாது. அவையினரில் அறிவுஜீவி களும் சிலர் இருப்பர். அவர்களிடமிருந்து நாடகம் முறித்துக் கொண்டு போய் விடுதல் கூடாது; மனப் போராட்டத்தைச் சித்தரிக்கும் நாடகங்களே சிறந்தவை என்றார்.

கவிதையில் உணர்ச்சி தவிர்க்க முடியாதது என்று அவர் ஒப்புக்கொள்கிறார். ஆனால் அதன் ஆத்மாவாய் இருப்பது

கூர்ந்துநோக்கும் ஆற்றலே. இதுவே ஞானத்திற்கு ஈடு ஆகும் என்பது அவர் கருத்து. வாழ்க்கையின் அனுபவங்களைக் கூர்ந்து பார்க்கும் இந்தப் பண்பையே அவர் காளிதாசனிடமும், ஷேக்ஸ்பியரிடமும் காண்கிறார். அவரைப் பொறுத்த அளவில், கவிதையின் இன்னொரு தேவை யாப்பு. குஜராத்திக் கவிதையின் எதிர்காலம் பற்றி அவர் ஆற்றிய ஒரு சொற்பொழிவில் கட்டற்ற புதுக்கவிதையை புகழ்ந்துள்ளார். குஜராத்தி மொழியில் உள்ள 'கடவ்' என்னும் யாப்பு அதற்கு இணையானது என்று கருதினார். யாப்பு என்பது கற்பனையை நெரிப்பதாகத் தோன்ற லாம். எனினும் சிந்தனை வடிவம் செய்யுளாக உருமாற வேண்டும் என்பதால் அது மிகவும் இன்றியமையாததாகிறது. அதே சொற்பொழிவில் தான் அவர் 'கொள்கைகளைக் கூறும் கவிதை' களை எழுதுவது பற்றியும் கூறியுள்ளார்.

கவிதைகளில் உணர்ச்சிச் சித்திரிப்பை விட தத்துவ நோக்கிற்கு கோவர்தன்ராம் முக்கியத்துவம் கொடுத்த விதத்தை நரசிங்கராவ் எதிர்த்தார். அவர் தன்னுடைய கருத்தை வெளியிடவில்லை எனினும் தனது குறிப்பேட்டில் தன்னைப் பொறுத்த அளவிலாவது கவிதை என்பது உணர்ச்சியே என்று குறித்தார். உண்மையில், கவிதையைப் பற்றிய கோவர்தன்ராமின் கருத்துக்களில் தத்துவம் ஒரு முக்கிய இடம் பெற்று இருப்பினும் அது ஆர்னால்டின் கருத்தை ஒத்ததே. கவிதையைப் பற்றிய அத்தகைய நோக்கு நவீனத் துவத்தையே பிரதானமாகக் கருதி, ஆழ்ந்த சிந்தனையையும் கருத்துக்களையும் மையமாகக் கொண்டது.

நாவலைப் பற்றிய தமது கருத்துக்களை கோவர்தன்ராம் 'சரஸ்வதி சந்திரன்' நூலின் நான்கு பாகங்களுக்குமாக ஆங்கிலத்திலும், குஜராத்தி மொழியிலும் எழுதியுள்ள முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். தனது பல்வேறு அழகிய வெளிப் பாடுகளினால் பிரமைகளைத் தோற்றுவிக்கும் உலகின் மாயைத் தோற்றத்திலிருந்து அழகைத் தனித்துக் காண்பதும், அதன் மூலம் உண்மையைக் கண்டறிவதுமே நாவலின் பணி என்று அவர் சரஸ்வதிசந்திரன் முதல் பகுதியின் முன்னுரையில் எழுதியுள்ளார். மாயையிலிருந்து உண்மையைப் பிரித்தறியும் தன்மை உண்மையைக் கண்டறியச் செய்யும். அதே பகுதியின் ஆங்கில முன்னுரையில், மக்களின் ஆன்மீக மற்றும் ஒழுங்கு நெறியை உயர்த்துவதற்காகத் தாம் சொல்ல நினைத்ததை எல்லாம் சொல்வதற்காகவே நாவலை எழுதியதாகக் கூறுகிறார். தான் சொல்லக் கருதியவற்றை எல்லாம் ஒரு கட்டுரைத் தொகுதியில் அளிப்பதை விட நாவல் வடிவத்தில் தரவே அவர்

விரும்பினார். ஏனெனில், அவற்றை மக்கள் படிக்க வேண்டும் என்று அவர் கருதினார். ஆகவே, வாசகர் ஆர்வத்துடன் படிக்கும் வகையில் துவங்கி, மெல்ல மெல்ல மேலான விஷயங்களைக் கூற வேண்டும் என்று அவர் தெரிந்து கொண்டிருந்தார். நூலை அதன் அழகுக்காகப் படிப்பவர்களும் உண்டு. அதில் உள்ள நீதி நெறிகளையும், ஆன்மீகத்தையும் தெரிந்து கொள்வதற்காகப் படிப்பவர்களும் உண்டு. ஒரு இனிய கதையின் இழைகள் யாவை, எவை என முடிவு செய்வதை நாவலாசிரியனின் நல்ல ரசனையே தீர்மானிக்க வேண்டும். நாவலுக்குக் கரு இருந்தாக வேண்டும். நாடகங்களைக் கூறும்போது அவர் குறிப்பிட்டது போல மற்ற எல்லா அம்சங்களைப் பற்றியும் கவலைப்படாத சாமான்யமான மனிதன் அடிப்படையான ஆர்வம் காட்டுவது கதையைப் பற்றியே.

ஆகவே, தனது மக்களின் நெறிசார்ந்த வாழ்வை, ஆன்மீக வளர்ச்சியைப் பற்றியே சிந்திக்கிற எழுத்தாளர் அதனைத் தமது எழுத்தின் மையப்பொருளாகக் கொள்ள வேண்டும். 'சரஸ்வதி சந்திரன்' நூலில் மையக் கருத்தாக இருப்பது அதுவே. திருப்பங்கள் நிறைந்த நெஞ்சை உருக வைக்கும் காதல் கதை. ஒரு நாவலாசிரியன் தன்னாட்சியால் ஒரு உலகத்தை உருவாக்கு கிறான். உண்மை என்று எண்ணத்தக்க பிரமையைத் தோற்று வித்து அதனால் அவ்வுலகுக்கு வண்ணம் சேர்க்கிறான். உயர்ந்த லட்சியங்களால் ஒளி சேர்க்கிறான். நாவலில் வெளிப்படும் சமகாலப் பண்பு, கூறப்பட்டுள்ள நீதிநெறி மற்றும் ஆன்மீக விஷயங்களுடன் இணைந்து விட வேண்டும்.

தற்காலத்தில் நிலை பெற்று ஆனால் எதிர்காலத்தையும் எட்டும்படியான உண்மைகளை எல்லாம் இணைத்து வழங்குவதே தமது குறிக்கோள் என்று மூன்றாவது பாகத்தின் முன்னுரையில் கோவர்தன்ராம் அறிவிக்கிறார். எதிர்காலத்தைப் பற்றி பொறுப்புணர்வும், அல்லது எதிர்காலம் பற்றிய குறிப்புகளும் நான்காம் பாகத்தில் ஆங்கில முன்னுரையிலும் வலியுறுத்தப் பட்டுள்ளன. இவ்வாறு எழுத்தாளர் எழுதுவதற்கு நியாயம் கற்பிக்கிறார்: ''அவன் கனவுகள் தீர்க்கதரிசனம் பொதிந்தவை என்பதோடு மட்டுமல்ல; வாசகனுக்கு ஒரு அக நோக்கையும் அதன் மூலம் தொலைவில் உணர்தலையும் ஏற்படுத்தி, இருளில் வழி தடுமாறும் நாட்டு மக்களுக்குச் சற்று ஒளி காட்டுதலும் எழுத்தாளனின் பணியாகும்'' என்கிறார்.

'சரஸ்வதிசந்திரன்' என்னும் மாபெரும் படைப்பில் இருக்கக்கூடிய சிக்கல்களை அவர் உணர்ந்தே இருந்தார்.

அது வாசகனுக்கும் மேலும் மேலும் குழப்பத்தை உண்டுபண்ணும் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். ஐரோப்பிய முறைகளையே தாம் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் அறிந்திருந்தார். எடுத்துக்காட்டாக, முதல் பகுதியில் கதாநாயகன் மையப் பகுதியில் இல்லை. இந்திய மாதிரியை எடுத்துக்காட்டாய்க் கொள்கிறார். பழம்பெரும் காவியங்களில் பல கிளைக்கதைகளை படைத்துக் கொண்டே போவதன் மூலமே அவை வளர்கின்றன. இறுதியில் அவை அனைத்தையும் இணைத்து ஒரே நோக்கத்தை நிறுவுவதில் கோவர்தன்ராம் வெற்றி கண்டார் என்றே கூறலாம். நாவலாசிரியரின் திடீர்த் தீர்வுகள் தரவேண்டிய அவசியம் இல்லை என்பதை அவர் உணர்ந்திருந்தார். தான் எடுத்துக் கொண்ட விஷயம் எவ்வளவு சிக்கலானது என்ற உணர்வு நாவலாசிரியனுக்கு இருப்பதே போதுமானது. அதுவே நாவலைத் துலக்கமும் தெளிவும் உடையதாகச் செய்து விடும்.

உண்மைக்குப் புறம்பானவை எனத் தோற்றம் காட்டுகிற அளவுக்கு உயரிய லட்சிய வடிவங்களாகத் தமது பாத்திரங்களைத் தாம் படைக்கவில்லை என்று அவர் கூறுகிறார். கீழ்நிலையில் உள்ள பாத்திரங்களை அளவு கோலாகக் கொண்டு மேலானவற்றைத் தீர்மானிக்கலாம். வாழ்வின் பல்வேறு தளங்களில், வேறுபட்ட சந்தர்ப்பங்களில் ஒருவன் படுகின்ற இன்னல்களைக் கூறுவதுதான் ‘சரஸ்வதி சந்திரன்.’

கோவர்தன்ராம், வாழ்வின் விமர்சகராக தனது கருத்துக்கள் அனைத்தையும் வாழ்வின் அடிப்படையிலேயே அமைத்துள்ளார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். எல்லாச் செய்திகளும் வாழ்வோடு தொடர்பு கொண்டவையாகவும் பொருத்தமானவையாகவும், வாழ்வையே நோக்கமெனக் கொண்டவையாகவும் இருக்க வேண்டும்.

# 8. பல்வகை எழுத்துக்கள்

மொழி, எழுத்து, சட்டம், அரசியல், சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றில் துவங்கி மதம், ஆன்மீகம் வரை கோவர்தன் ராம் பல்வேறு தலைப்புகளில் எழுதியுள்ளார். அவற்றுள் சிலவற்றைப் பற்றி ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். அவை அனைத்துமே கொள்கையைக் கூறுபவைகளாகவும் நாட்டுப் பற்றைப் பற்றிக் கூறுபவைகளாகவுமே உள்ளன. 'அத்யாத்ம ஜீவன்' என்னும் அவருடைய தத்துவக் கட்டுரை முடிவு பெறாமல் நிற்கிறது. ஜீவன்முக்தனின் லட்சியங்கள் பற்றிய அவருடைய கருத்துக்களை முன்னரே கண்டோம். 'திரியோக யோகா' அல்லது முவ்வித யோகம் என்னும் தத்துவத்தைப் பற்றி கோவர்தன்ராம் வெளியிடும் கருத்து ஸ்ரீ அரவிந்தரின் 'பூரண யோகம்' என்பது போன்றது; அதற்கு முன் தோன்றியது என்கிறார் விஷ்ணுராம் திரிவேதி. அம்பாலால் புராணி என்பவரோ 'அத்யாத்ம ஜீவன்' என்னும் நூல் விஞ்ஞானத்தையும் ஆன்மீகத்தையும் இணைக்கிற முயற்சி என்கிறார்.

கோவர்தன்ராமின் குறிப்பேடுகள் கவனத்தில் கொள்ளத் தக்கவை. 1885 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பம்பாய் உயர்நீதி மன்றத்தில் வழக்கறிஞராகப் பணி புரியத் துவங்கும் போது அவர் எழுத ஆரம்பித்தவை இவை. 1906 ஆம் ஆண்டு நவம்பர் மூன்றாம் நாள் தனது மறைவுக்கு சில மாதங்கள் முன்பு வரை இதனைத் தொடர்ந்து எழுதி வந்தார். பல்வந்த்ராய் தாக்கோரும் மற்றும் சிலரும் அவற்றைக் கண்டுள்ளனர். கோவர்தன்ராமின் கொள்கைகள் சிலவற்றை விளக்குவதற்கு அவைகளைப் பயன் படுத்தியும் இருக்கிறார். கோவர்தன்ராம் பற்றிய தம் நூலில் உத்தம்லால் திரிவேதியும் அக்குறிப்புப் புத்தகங்களைத் தாராளமாகப் பயன் படுத்தியுள்ளார். இக்குறிப்புப் புத்தகங்களை ஆங்கிலத்தில் மூன்று பாகங்களாகவும், குஜராத்தி மொழியின் சுருக்கப்பட்ட பதிப்பாகவும் ராம் பிரசாத் பக்ஷி வெளியிட்டுள்ளார். தமது வாழ்வின் பிரச்சினைகள், குணங்கள், உணர்வுகள், லட்சியங்கள், ஓய்வான வாழ்க்கையை மேற்கொள்ளுதல்,

சந்நியாசம், யோகம், குடும்ப வாழ்வும் **அதன்** சிக்கல்களும், ஆன்மாவைப் பற்றிய குறிப்புகள், கடவுள், மரணத்திற்குப் பின் வாழ்வு, நற்குணங்கள், தீயகுணங்கள், மகிழ்ச்சி, ஜாதகம், தமது படைப்புகள், சமகாலத்திய நிகழ்வுகள் என பலப்பல விஷயங்களை இக் குறிப்புகள் தம்முள் அடக்கியுள்ளன. தம்மைப் பற்றி அவர் குறித்துள்ள பகுதிகளே குறிப்பேடுகளில் காணப்படும் சிறந்த பகுதியாகும். ஆன்மீக உணர்வுகள் நிறைந்த தம்மையே தாம் பரிசீலித்துக்கொள்கிற, வியந்து பாராட்டத் தக்க ஒரு நிறை வாழ்வு வாழ்ந்ததை அவை குறிக்கின்றன.

# 9. முடிவுரை

மேலை நாட்டினர் கொள்ளும் பொருளில் அல்லாமல், இந்திய வாழ்வுத் தரத்தின் படி கோவர்தன்ராம் நிறைவாழ்வு வாழ்ந்தவர் எனக் கொள்ளலாம். அவ்விதத்தில் அவருடைய வாழ்வு எல்லா மாபெருங் கலைஞர்களின் வாழ்வைப் போன்றதேயாகும். அவர் தம் ஆற்றலை அறிந்திருந்தார், தனது குறைகளையும் உணர்ந்திருந்தார். ஒரு மனிதர் என்கிற முறையில் இழப்புகளையும், துன்பங்களையும் அவர் அடைந்திருந்தார். ஒரு மனிதனாகவும், எழுத்தாளனாகவும் தன்னையே அறிந்து கொள்கிற முயற்சியின் உயர்ந்த சிகரங்களை எட்ட இடைவிடாமல் முயன்றார். அதுவே அவரது சிறப்பும் தனித்தன்மையும் ஆகும்.

'சரஸ்வதி சந்திரன்' நூலை அவர் எழுதிய வாழ்வின் அப்பகுதியை நோக்கினால், அங்கு எழுத்தாளனுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த இடைவெளி நீங்கியிருப்பது தெரிகிறது. ஒரு கலைஞன் என்ற வகையில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தைத் திசைதிருப்பப் போதுமான பண்புகள் அவரிடம் இருந்தன. அவர் ஒரு தேசபக்தர், நீதி நெறியாளர், சமூக சிந்தனையாளர், அவை அனைத்தும் கட்டுக்குள் வைக்கப் பட்டு, கலைச்சேவைக்குப் பணிபுரியவே பயன்படுத்தப்பட்டன என்பது கலையின்பால் இருந்த நேர்மையான பற்றையும் உண்மையான தீவிரத்தையுமே காட்டுகின்றன. மேலைக் கலாச்சாரத்துடன் அவர் கொண்டிருந்த தொடர்பே அவரது குணநலனில் இத்தன்மை மாபெரும் சக்தியுடன் வளரக் காரணம் எனலாம்.

கோவர்தன்ராம் வேறுபட்ட சூழ்நிலைகளின் நடுவே நின்றார். அச்சூழ்நிலையின் தன்மைகளையே பயன்படுத்தியும் கொண்டார். அவர் எழுதியுள்ள மாபெருங்காவியமான 'சரஸ்வதி சந்திரன்' இந்த நிலையின் அடையாளமாகும். பழமையில் இருந்து கோவர்தன்ராமும், அவரது காலத்தவரும் ஸ்வீகரித்துக் கொண்ட முழுமைபெற்று இயங்குகிற வாழ்வின் இழைகளை இந்நூலில்' அவர் படைத்துக் காட்டுகிறார். நாள்தோறும் வளர்ந்து, சிக்கலாகிக் கொண்டே போகிற, விரைவாக மாறிவரும் சமூகத்தின் சீரிய தன்மைகளையும் எதிர்நோக்குகிறது.

இணைப்பு 1

# குறிப்பேடுகளில் இருந்து சில பகுதிகள்

## 1. குறிப்பேடு-என் தோழன்

இத்தகைய குறிப்பேடுகளில் மேலும், மேலும், மேலும் எழுதிக் கொண்டே போவதன் பொருள் என்ன? சில சமயங்களில் அழிந்து போய்விட முடியாதபடி என் தீர்மானங்களைக் குறித்து வைக்கிறேன். அம்முயற்சியே சில சமயங்களில் என் முடிவுகளைச் சீரானதாகவும் ஆக்குகிறது. எழுத்தில் வடிப்பதன் மூலம் என் இதயமும் லேசாகிறது. எனக்கு, என்னைத் தவிர பேச்சுத் துணைக்கு வேறு நண்பர்கள் இல்லை. இப்பக்கங்களைப் புரட்டும் போது, எனக்கு நானே நினைவூட்டிக் கொள்கிறேன், இரக்கப் பட்டுக் கொள்கிறேன். ஆறுதல் பெறுகிறேன். அவற்றில் தெரிகிற எனது பலவீனங்களை உணர்ந்து நாணம் கொள்கிறேன். தைரியத்தையும் வலிமையையும் பெறுகிறேன். முன்னதும் பின்னது மாய் செல்லும் நீரோட்டத்தின் இடைவிடாத தொடர்ச்சியை இதில் காணலாம். எனது பலமும், பலவீனமும் இவற்றில் உள்ளன. இவற்றில் இருந்து நான் பாடம் கற்றுக் கொள்ள லாம், எதிர்காலத்தில் பிறர் இதைப் படிப்பார்கள் என்பதைப் பற்றி பயமோ கூச்சமோ கொள்ளத் தேவை இல்லை. அவர்கள் கூறுவதை நான் கேட்க முடியப் போவதில்லை. தத்துவரீதியாகப் பார்த்தால் என்னைப் போல ஒரு தலைமறைவு வாழ்க்கையை வாழ்ந்தவனின் அநுபவங்கள் அவர்களுக்கு பயன் தரலாம். அது அவனுக்கு தீங்கு விளைவிக்கும் என்றால்—நான் என்ன செய்ய முடியும்? அப்படிப்பட்ட தீங்கு எதனையும் இது விளைவிக்காது என்றே நான் நம்புகிறேன். ஆனால் இவை அனைத்தும் திரிக்கப் படக் கூடும். அதற்கு எதிராகக் காத்துக் கொள்ளாமல் விடுதல் தவறே ஆகும். நன்று, இது எனது தனிப்பட்ட விஷயம். இது பிறர் கரம் புகுமானால் அதைப் பெறுபவர்கள் தமது எண்ணப் படி இதைப் பயன்படுத்திக் கொண்டு அழித்து விடட்டும்.

மாபெரும் சித்தமே எனது சித்தத்தில் இதனை எழுத சித்தப்பட வைத்தது. என்னால் அறிய முடிந்த எல்லைகளின் நன்மையையும் சிறப்பையும் எழுதியுள்ளேன். அத்துடன் என் கடமை முடிந்தது.

## 2. எனக்கு வயது நாற்பத்தைந்துக்கு மேலாகி விட்டது

நான் நாற்பத்தைந்து ஆண்டுகளைக் கடந்து விட்டேன். வழக்குரைஞர் தொழிலைத் துறந்து இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன. எனது வாழ்வு வேறு புதிய தோற்றத்தைக் கொண்டு விட்டது. வாழ்வின் இறுதிப் பகுதி வரை இந்நிலையே தொடர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனது பொறுப்பில் உள்ளவர்களைப் பற்றிச் சிந்திப்பதே இப்போது என் வாழ்வாகி விட்டது. கடவுளுக்கும் ஆன்மாவுக்கும் என் கடமைகள் என்னவோ அவற்றையும் நான் ஆற்றி வருகிறேன். என்னை விட மேலான சிந்தனையாளர்களைப் பற்றிப் பயில்வதன் மூலமே நான் அதனைச் செய்து வருகிறேன். என்னைப் பொறுத்த வரை நான் ஏற்றுக் கொண்ட பணி முடிந்து விட்டது. எனது புதிய படிப்பும் சிந்தனைகளும் வேறு பணியில் என்னை ஈடுபடுத்தலாம். அந்தப் பணிக்கு இக்குறிப்பேடு உதவும். அதுவரை இக்குறிப்பேடு எனது நாட்டில் இப்போது நிகழ்ந்து வருவன பற்றியும் நிறுவனங்கள் பற்றியும் கூறும். எனது பழைய குறிப்பேடுகளில் உள்ளது போல எனது ஆன்மாவைப் பதப்படுத்தும் அணையாக் கங்குகளையும், பொறிகளையும் கொண்டிருக்கும். நான் நிறைவோடு இருக்கிறேன். ஆசைகளும் கனவுகளும் அற்றவனாக இருக்கிறேன். கடமைகளில் இருந்து விடுபட்டு விட்டேன். அனைத்தையும் துறந்து விட்டேன். காலங்கடந்த தன்மை, பிரபஞ்சவெளிகளைக் கடந்த தன்மை, மாபெருஞ் சித்தமும் சக்தியும் ஆகியவை போன்ற அலைகளின் மீது மிதக்கிறேன். அக்கடல்களின் மிது என் சித்தம் சஞ்சரிக்கிறது. எனது மனமும் நெறிகளும் மாபெரும் மாற்றங்களுக்கு உள்ளாகி உள்ளன. எனது ஆன்மாவும் உலகும் நன்மை பெறத்தக்கபடி மாறியுள்ளன. அது உலகின் ரசனைக்கேற்றபடி இல்லாமல் இருக்கலாம். ஏனெனில் எனது ஆன்மா உயர உயரப் பறக்கும் போது உலகம் அதனிடம் இருந்து வெகு தொலைவில் சென்று விடுகிறது. அது தான் இறைவனின் சித்தமானால், நான் ஏசுநாதரைப் போல ''இறைவா! என் சித்தப் படி அல்ல உமது சித்தப்படியே நடை பெறுவதாக'' என்றே கூறுவேன்.

குறிப்பேடு VI

22-2-1901.

## 3. எனது குணம்

எனது குணம் பொதுவாக அமைதியானது. மகிழ்ச்சி தரத் தக்கது. சில சமயங்களில் அது சலசலப்புக்குள்ளாகிறது. அத்தகைய சந்தர்ப்பங்களுக்குத் தான் வாழ்வில் பஞ்சமே இல்லையே.... எதற்காக கோபங்கொள்ள வேண்டும்?

நன்று. 'நான்' என்கிற அகங்காரத்தில் ஊடாடும் இந்தச் சிறுபறவைகளின் கலகலப்பைக் கண்டு நான் ஏற்கனவே புன்னகை பூக்கத் துவங்கி விட்டேன். அவை பறந்து செல்லத் தயாராகி விட்டன. அவை பறந்து விட்டன என்றே நான் எண்ணுகிறேன். கண்ணுக்குப் புலனாகாத வெளியில் அவை கலக்கின்றன அவை வருவதற்கு முன்பு இருந்த இடத்திலேயே நான் இருக்கிறேன். இறைவனின் சித்தம் அது தான். அவை வருகின்றன. அவை செல்கின்றன ''மிகக் கடுமையான நாளிலும் காலமும் மணியும் ஓடுகின்றன.''

தன்னை அறிந்தவன் சோகத்தை வெல்கிறான்
தன்னை அறிந்தவன் கோபத்தை வெல்கிறான்
தன்னை அறிந்தவன் காமத்தை வெல்கிறான்

கோவர்தன்ராம்
23-8-1892

## 4. என் இல்லத்தை புனிதப்படுத்திய ஆன்மா

என் லீலாவதி, பழுதற்ற களங்கமற்ற வாழ்வு வாழ்ந்து விட்டு 1902-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் எட்டாம் நாள் உயிர் துறந்தாள். அவள் இந்து சமுதாய அமைப்பிற்காக உயிர் துறந்த வீராங்கனை. ஒரு சீர்திருத்த மாற்றத்துடன் அவளுக்கு மிக இளமையிலேயே திருமணம் செய்து வைத்த தந்தையினால் பலியானவள் வாழ்நாள் முழுவதும் அவள் தன் தந்தையை கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொண்டவள். அதனாலேயே தன்னைக் கவனித்துக் கொள்ள அவளுக்கு நேரமில்லாமல் போய் விட்டது... லீவாதியின் வாழ்வின் இறுதிக் கட்டத்தை நான் கண்டேன்... மென்மையும் புனிதமும் மிக்க அவளுடைய உடல் எடுத்துச் செல்லப்படுவதைக் கண்டேன். மிக இனிய, மிக ஞானமிக்க மிகப் பெருந்தன்மையுடைய மிகப் புனிதமுடைய அந்த உயிர் குடியிருந்த உடல் எடுத்துச் செல்லப்பட்ட போது இதயமும், தலையும் குனிய பிரார்த்தனையில் நான் கரம் குவித்தேன். துயரில் உளைந்த அந்த ஆன்மா, என் குடும்பத்தின் அங்கமாகி

பிறந்த நாள் முதல் துன்பமே பட்டது. எனது இல்லத்தைப் புனிதப் படுத்தியது. லீலாவதியை எண்ணி என் நெஞ்சம் படும் அளவற்ற துயரை சற்றும் மாற்ற முடியாது. இவ்வளவு தத்துவ வாதங்களும் என் கண்ணீரை நிறுத்திவிட முடியாது...என் மதிப்பிற்குரிய இனிய லீலாவதி மறைந்து இன்றுடன் ஒரு ஆண்டு ஆகிறது. அவளுடைய ஆன்மாவுக்கு என் வணக்கங்கள். அவளுக்கு உள்ளே இருந்த புனிதமான ஆற்றலை... இப்பொழுதும் அது அவளுக்குள்ளே இருக்கும் என்பதில் ஐயமில்லை... இப்போதும் இருக்கும்... அதை எண்ணி எனது மேசையின் மேல் இருக்கிற அவளுடைய படத்துக்குத் தலை வணங்குகிறேன். எங்கும் நிறைந்திருக்கிற இறைவனுடன் நீ ஒன்றி விட்டாய். மானுட அறிவை விஞ்சி நிற்கிற, எனினும் தனி மனித அறிவுக்கும், அதன் நடுக்கத்துக்கும் காரணமாய் இருக்கிற இறைவனின் சித்தத்தில் இரண்டறக் கலந்து விட்டாய். என் குழந்தையாய் இருந்தவளே! நீ மறைந்து விட்டாய். அணையா ஜோதியில் கலந்து விட்டாய். ஜோதியின் சுடராய் நான் நடுங்குகிறேன். உனது உயிரை என் உயிரில் கலந்து விட்டாய். அப்படியே இருப்பாய் நீ.''

குறிப்பேடு—4
9.1.1902

இணைப்பு—2

# கோவர்தன்ராம் எழுதிய நூல்களும் கட்டுரைகளும்

| வரிசை எண் | வெளியீட்டின் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 1. | இப்பிரபஞ்சத்தைப் படைத்தவன் யாரேனும் உண்டா? | 1873 |
| 2. | பம்பாய் மாகாணத்தில் இந்து சமூகத்தின் நிலைமை | 1873 |
| 3. | ஹிருதய ருதி தஸ தகம் | 1875 |
| 4. | புத்திக்ருணிடதம் | 1875 |
| 5. | பல்கலைக் கழக கல்வியின் வாய்ப்புகள் | 1875 |
| 6. | இந்தியர்கள் மீதும் கல்விப்பயிற்சியின் மீதும் குழந்தை மணம் ஏற்படுத்தும் விளைவுகள் | 1876 |
| 7. | 'நடைமுறைத் துறவு' பற்றி எனது கருத்துகள் | 1877 |
| 8. | சிவாஜியின் அன்னை ஜீஜீ | 1877 |
| 9. | நானா ஃபட்நாவிசின் குணநலன்கள் | 1877 |
| 10. | குஜராத்தி மற்றும் மராத்தி சரித்திரங்களின் குணங்களை ஒப்பு நோக்கும் ஆய்வு | 1877 |
| 11. | நம்மிடையே மத சீர்திருத்தங்கள் | 1877 |
| 12. | குழந்தை மணம் | 1877 |
| 13. | எனது மதம் | 1877 |
| 14. | ஆண்-பெண் உறவுகள் | 1877 |
| 15. | இயற்கை விஞ்ஞானம் பற்றிய அறிவை இந்தியாவில் பரப்பும் வழிகளும் அதனால் விளையும் நன்மைகளும் | 1877 |

| வரிசை எண் | வெளியீட்டின் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 16. | மனசுக்ராம் க்ருத் 'கோகுல்ஜி ஜாலா நு ஜீவன் சரித்ரா' நு அவலோகன் | 1877 |
| 17. | வேதமும் வேதாந்தமும் | 1882 |
| 18. | குற்றவியல் சட்டத்தின் தத்துவமும் விஞ்ஞானமும் | 1884 |
| 19. | சன்சார் சுதாரோ | 1885 |
| 20. | 'குசும மாலா' பற்றிய குறிப்புகள் | 1887 |
| 21. | 'சரஸ்வதிசந்திரன்' பாகம் I | 1887 |
| 22. | நாதியதப் பிரதேசத்து வதநகர, நகரப் பிராமணர் திருமணங்கள் | 1887 |
| 23. | மரணத்துக்குப் பிறகு வாழ்வு உண்டா? | 1887 |
| 24. | குறிப்பேடுகள் | 1888-1906 |
| 25. | 'சிநேக முத்ரா' | 1889 |
| 26. | 'ரச சுந்தரி அனே தத் வானந்த சுவாமி' | 1889-1905 |
| 27. | திரு. மணிலால் என். திரிவேதி, பி.ஏ.வின் 'தெய்வ உபாசனையா அத்துவைதமா?' சங்கர வேதாந்தத்தின் அத்வைதம் | 1889-1905 |
| 28. | நவல்ராம், லஷ்மிராம் நுஜீவன் விருத்தாந்த் | 1891 |
| 29. | மதம் சார்ந்த வேதாந்தத்தினைப் பற்றிச் சில கேள்விகள் | 1891 |
| 30. | 'சரஸ்வதிசந்திரன்' பாகம் II | 1892 |
| 31. | ஜீவ, ம்ருத்யு, அனே ம்ருத்யு பச்சி | 1892 |
| 32. | ஆசியா, யூரோப் வகேரா கண்டோ மன் நி மகாப்ராஜாவோ மன் ஜன்சம்பவ் ந லக்ஷ்ணிக் தீருஷ்டாந்த் | 1893 |
| 33. | சன்சார் பிரதிபிம்ப் | 1893 |
| 34. | சமூகம் மற்றும் நீதி நெறிகளின் மீது குஜராத்தின் பண்டைய இலக்கியக் கவிஞர்களின் தாக்கம் | 1894 |
| 35. | கர்மா, தர்மா அநே ஞான் தத்சப்பதே தேஷ்கால்நோ விவேக் | 1894 |
| 36. | கவிதா, காவ்யா, கவி ஏ விஷயே மிடாக்ஷார் | 1896 |

| வரிசை எண் | வெளியீட்டின் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 37. | குஜராத்தி சப்தோ நி லேகன் பத்திநோ விவேக் | 1896 |
| 38. | வேத புராணங்களின் சில கூறுகள் | 1896 |
| 39. | அ கல் ந அப்ந ஆதி நாடக் | 1896-97 |
| 40. | குஜராத்தி லேகான் பத்தாதி அநே நரசிங்கராவ் போலாநாத் | 1897-98 |
| 41. | 'சரஸ்வதிசந்திரன்'—பாகம் III | 1898 |
| 42. | குஜராத்தி கவிதாநு பவிஷ்யா | 1899 |
| 43. | இந்திய மதத்தின் கோடாத்தன்மை | 1899 |
| 44. | சாக்ஷரிஜீவன் | 1899-1903 |
| 45. | மாதவ்ராம் ஸ்மார்கா | 1900 |
| 46. | ஒரு ஆங்கிலேயனுடைய இந்துவினுடைய வாழ்க்கைத் துவக்கம் | 1900 |
| 47. | நமது சமூக, உள்நாட்டு நிறுவனங்களின் வரலாறு | 1900 |
| 48. | 'சரஸ்வதிசந்திரன்'—பாகம் IV | 1901 |
| 49. | பண்டைய இந்து சட்டப்படி திருமண முறைகள் | 1901-1902 |
| 50. | வாழ்வு பற்றிய லட்சியங்களின் நடைமுறைத் தன்மைகள் | 1902 |
| 51. | க்ஷேம்ராம் அநே சாத்வி | 1902 |
| 52. | தம் குடிமக்களின் தந்தையாக இந்து மாமன்னர் | 1902 |
| 53. | சூரத்தின் தலைசிறந்த இனத்தவர்களின் தன்மைகளும் கடமைகளும் | 1902 |
| 54. | 'சுனி சதி'—இந்து வாழ்வின் கதை | 1902 |
| 55. | அத்யாத்ம ஜீவன் அத்வ அமர் ஜீவன் நோ ஷ்ருதிபோத். | 1902-03 |
| 56. | பொதுவாழ்வில் செயல்பாடுகள். | 1903 |
| 57. | உத்யோக் ஹுன்னார் விஷாயக் சாஹித்யநோ பிரச்சார் | 1903 |
| 58. | ப்ராச்சீன் ஹிந்த் நோ பிராமண் தர்மா | 1903 |
| 59. | இந்தியாவில் மதம் மாறியவர்களுக்கிடையேயும் மாறாதோருக்கும் இடையேயான பூசல் | 1903 |

| வரிசை எண் | வெளியீட்டின் பெயர் | ஆண்டு |
|---|---|---|
| 60. | பண்டைய இந்தியாவில் உயர்ந்த பிராமணீயம் | 1903 |
| 61. | ஏழ்மை பற்றிய ஹிந்து லட்சியம் | 1903 |
| 62. | பஸ்சாத்யா ஹஸ்யாரஸ் அநே தெனம் எடத் தேஷிய ரூபாந்தார் | 1904 |
| 63. | திரு. கேகுஷ்ராவ் நவ்ரோஜி காப்ராஜி 'நி துங்க் பைச்சான்' | 1904 |
| 64. | கவிபோக்யா கவிதா | 1904 |
| 65. | அத்யாத்மிக்கவி அநே தேனி கவிதா | 1904 |
| 66. | அநுபம் திமிர் | 1904 |
| 67. | அநுபம் தேஜ் | 1904 |
| 68. | குஜராத்தி கிரியாபாட் நி வ்யூத்பட்டின நியமோ | 1904 |
| 69. | 'இருத்தலின் பிரச்சினை'யை மறுபார்வை புரிதல் | 1904 |
| 70. | ராஜகீய விஷயோ மன் சாத்வீக் வ்ருத்தி | 1904 |
| 71. | லீலாவதி ஜீவன்கலா | 1905 |
| 72. | குஜராத் நா ப்ராச்சீன் சாஹித்யானா இதிஹாஸ்நு திக்தர்ஷன் | 1905 |
| 73. | இந்து மதப் பொருளாதாரத்தின் அடிப்படை | 1905 |
| 74. | ப்ரணவ் புருஷ் | 1905 |
| 75. | குருக்ஷேத்ரா | 1905 |
| 76. | மன்னன் மற்றும் மாநிலம் பற்றிய இந்து லட்சியம் | 1905 |
| 77. | தயாராம் இடுமாலுடன் கடிதத் தொடர்பு | 1906 |
| 78. | பண்டைய இந்தியாவில் பௌதீகம் | 1906 |
| 79. | இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்க்கும் உள்ள இடைவெளி | 1906 |
| 80. | கவி தயாராம் நோ அக்ஷர் தேஹா | 1906 |
| 81. | தமயந்தி தமாநந்தா | 1906 |
| 82. | சரஸ்வதி அநே மாயா | 1906 |
| 83. | ஒழுக்க விதிகள் | 1906 |
| 83. | சட்டக் குறிப்புகள், இதரசில | 1906 |

இணைப்பு—3

# கோவர்தன்ராம் பற்றி வெளிவந்த குஜராத்தி நூல்கள்

| வரிசை எண் | வெளியீட்டின் பெயர் | ஆசிரியர் |
|---|---|---|
| 1. | சரஸ்வதிசந்திரா நு அவலோகன் | விஸ்வநாத் பி. வைத்யா |
| 2. | கோவர்தன்ராம் மாதவராம் திரிபாதி அநே தெம்னி சாகித்யசேவா | மணிசங்கர் டி. ஜோஷி |
| 3. | கோவர்தன்ராம்பாய்-ஸ்மரணாஞ்லி | சந்திரசேகர் பாண்டியா |
| 4. | பண்டிட்யுக் நு மகாகாவ்யா | விஸ்வநாத் எம்.பட் |
| 5. | ஸ்ரீயுத் கோவர்தன்ராம் | காந்திலால் சி. பாண்டியா |
| 6. | கோவர்தன்ராம் நு சல்வாரி ஜீவன் அநே சம்காலி ஜீவன் | காந்திலால் சி. பாண்டியா |
| 7. | ஜகத் காதம்பரி மன் 'சரஸ்வதி சந்திரன்' நு ஸ்தான் | நானாலால் கவி |
| 8. | கோவர்தன் சதாப்தி கிரந்த் | எட். உபேந்திரா சி. பாண்டியா |

| வரிசை எண் | வெளியீட்டின் பெயர் | ஆசிரியர் |
|---|---|---|
| 9. | கோவர்தன் சதாப்தி ஸ்மாரக் கிரந்த் | எட். வி. ஆர். திருவேதி<br>மங்கல்பாய் தேசாய்<br>உபேந்திர பாண்டியா<br>யஷ்வந்த் அக்லா |
| 10. | விவித் வியாக்யாநோ பாகம் | பல்வந்த்ராய் தாக்கோர் |
| 11. | கோவர்தன்ராம் | மன்சுக்லால் ஜவேரி |
| 12. | கோவர்தன்ராம்: சிந்தக் நே சர்ஜக் | வி. ஆர். திரிவேதி |
| 13. | கோவர்தன்ராம்—ஏகி அத்யாயன் | ரமன்லால் ஜோஷி |
| 14. | சரஸ்வதி சந்திரா நோ மஹிமா: எனி பட்ராஸ்ருஸ்டி மன் | ரஸிக்லால் சி. பரிக் |
| 15. | கோவர்தன்ராம் நு மனோராஜ்யா | ராம்பிரசாத் சி.பாக்சி |
| 16. | 'வசந்த்' நோ கோவர்தன் ஸ்மாரக் அங்க் | |
| 17. | 'சமலோச்சக்' நோ கோவர்தன் ஸ்மாரக் அங்க். | |

**ஆங்கில நூல்கள்**

| வரிசை எண் | வெளியீட்டின் பெயர் | ஆசிரியர் |
|---|---|---|
| 18. | சரஸ்வதிசந்திரா—எ கிரிடிகல் எஸ்டிமேட் | ஆர். ஐ. படேல் |
| 19. | கோவர்தன்ராம் | ரமன்லால் ஜோஷி |

—●—

Indian Institute of Advanced Study
117393
14/12/04
SHIMLA

கோவர்தன்ராம் மாதவராம் திரிபாதி எழுதிய ''சரஸ்வதி சந்திரன்'' குஜராத்தி இலக்கியத்தின் மிகச் சிறந்த நூலாக இன்றும் கருதப்படுகிறது. கோவர்தன்ராம் குஜராத்தி, சமஸ்கிருதம் மற்றும் ஆங்கிலத்தில் எழுதினார். இளம்வயதிலேயே சமஸ்கிருதத்தில் கவிதை எழுதும் திறம் பெற்றிருந்தார். சமஸ்கிருதத்தில் அவர் எழுதிய மனோதூதம் ஹிருதய ருதிடசாஷகம் மற்றும் விதிகுந்திடம், குறிப்பிடத் தக்கவை. கல்வி, பொருளாதாரம், அரசியல், சரித்திரம், தத்துவம், சட்டம், வர்க்க சாஸ்திரம், விஞ்ஞானம் போன்றவை பற்றி ஆங்கிலத்தில் எழுதினார். குஜராத்தியில் சிநேகமுத்திரா சக்சர் ஜீவன், லீலாவதி ஜீவன் கலா மற்றும் 'கவி தயாராம் நோ அக்ஷர் தேஹா' என்ற நூல்களையும் எழுதியுள்ளார்.

அகமதாபாத்தில் நடைபெற்ற முதல் குஜராத்தி சாகித்திய பரிஷத்தின் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார் கோவர்தன்ராம். இந்திய தேசிய காங்கிரஸின் நடவடிக்கைகளில் மிகுந்த ஆர்வம் காட்டினார். இந்தியா மற்றும் வெளிநாடுகளின் பொது நடவடிக்கைகளில் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

இந் நூலாசிரியர் ரமன்லால் ஜோஷி அகமதாபாத் குஜராத் பல்கலைக் கழகத்தில், குஜராத்தித் துறை பேராசிரியர். இவர் கோவர்தன்ராம் குறித்து ஆராய்ச்சி செய்திருக்கிறார். இவர் ஒரு சிறந்த திறனாய்வாளர். திறனாய்வுத் துறையில் 12 நூல்களை எழுதியுள்ளார்.

*Govardhanram* (Tamil)

Library IIAS, Shimla
T 891.471 809 2 G 746 J
00117393